22.08.2016

# தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### நடக்க வேண்டும் வாழி காவேரி!



உலகிலேயே முதல்தரமான காபி விளையும் இடம் குடகு மலை. இந்தக் குடகு மலை காவிரி உற்பத்தியாகும் இடத்தில் உள்ளது. குடகு மலையின் எழிலை வர்ணிக்க வார்த்தைகள் இல்லை. மேற்குத்

தொடர்ச்சி மலையின் பசுமைப் பகுதி குடகு மலை.

குடகு மலைப் பள்ளத்தாக்கில் அற்புதமான மரங்கள். அம்மரங்களின் நிழலில் காபி பயிராகிறது. ஆங்காங்கே நெல் வயல்கள். பல்லுயிர்ப் பெருக்கம் சிதைவுறாமல் "நிழல் காபி' பயிராகும் அற்புத

இயற்கை விருந்தினால் காவிரி வாழ்கிறது. இப்படிப்பட்ட பல்லுயிர்ப் பெருக்கத்திற்கு ஒரு ஆபத்து காத்திருக்கிறது.

சுமார் 800 கி.மீ. நீளமுள்ள காவிரி 400 கி.மீ. கர்நாடகத்திலும் 400 கி.மீ. தமிழ்நாட்டிலும் ஓடுகிறது. பல உபநதிகள் காவிரியில் சங்கமிப்பதால் தமிழகத்தில் குளித்தலை தாண்டி முக்கொம்பு வரும்போது

அகண்ட கடல்போல் காட்சி அளித்துச் சரிபாதி கொள்ளிடமாகப் பிரிகிறது. அப்படிப் பிரிந்தும் அகண்ட காவிரியை அனுபவிக்கும் பேறு பெற்றவர்களாக திருச்சி மக்கள் உள்ளனர். எனினும் அதில் முழுமை இல்லை.

ஆடிமாதத்தில் ஆடிப்பெருக்கு விழாவைப் பதினெட்டாம் பேர் என்று தமிழ்நாட்டு மக்கள் கொண்டாடுவதுண்டு. அவரவர்கள் வசதிப்படி ஆறு, குளம், கடல்களில் விரதமிருந்து தலை முழுகுவார்கள்.

மாலையில் சப்பரம் இழுப்பார்கள்.

குலதெய்வக் கோவில்களுச் சென்று சாமி கும்பிடுவார்கள். ஆடிப்பட்டம் தேடி விதைத்து நல்ல விளைச்சல் பெற வேண்டும் என்பதே நோக்கம்.

அன்று காவிரியில் தண்ணீர் கரைபுரண்டோடும். போதிய அளவு நீர் நிரம்பினால்தான் மேட்டூர் அணை திறக்கப்படும். போதிய அளவுநீர் இருப்பதில்லை. ஆடிப்பெருக்கு விழாவுக்காக வழக்கம்போல் இந்த

ஆண்டும் கொஞ்சம் தண்ணீர் திறந்துவிடப்பட்டது. முடியரசர் காலத்தில் வைகாசி ஆனி மாதங்களிலேயே காவிரி கரைபுரண்டோடும்.

1931-இல் கர்நாடகத்தில் மைசூர் அருகே கண்ணம்பாடி அணை கட்டி கிருஷ்ணராஜசேகரம் ஏரி நீர் நிரம்பி வழிந்தபின்னர்தான் மேட்டூர் அணை நிரம்பும். கண்ணம்பாடி அணையின் தலைக்கட்டில்

காவிரியில் ஹேமாவதி சங்கமமாகிறது. கிருஷ்ணராஜசாகரம் தாண்டி வரும் காவிரியுடன் கபினியும், பின்னர் சுவர்ணவதி நதியும் கலக்கின்றன.

கபினி வடகேரளத்தின் மேற்குத்தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகிக் கிழக்குநோக்கி வந்து காவிரியில் கலக்கிறது. கபினி நதியிலும் அணை கட்டப்பட்டு கர்நாடகத்திலிருந்து வரக்கூடிய காவிரி வரத்து

குறைக்கப்பட்டது. வேறு பல நதிகளும் தமிழ்நாட்டில் காவிரியுடன் கலக்கின்றன.

காவிரி தமிழ்நாட்டு எல்லைக்கு வரும்போது நல்ல சரிவு. ஒகனேக்கல் நீர் வீழ்ச்சியைத் தாண்டி மேட்டூருக்கு வருகிறது. மேட்டூர் தாண்டி வரும்போது பவானி ஆறு சங்கமமாகிறது. பவானி சாகர்

அணையை நிரப்பிவிட்டு வழியும் நீரே காவிரியில் சங்கமமாகிறது.

இவ்வாறு பல்வேறு தடுப்பு அணைகள் கட்டப்பட்டுவிட்டதால் காவிரியின் நீர்வரத்து அதிகரிப்பது என்பது குடகுமலையில் வெள்ளம் வரும் அளவுக்கு மழை பொழிந்தால் கர்நாடகத்தில் கட்டப்பட்ட

அணைகள் திறக்கப்பட்டு மேட்டூர் அணையும் நிரம்பித் தடுக்க வழி இல்லாமல் திறந்துவிடப்பட்டால் காவிரி கரைபுரண்டோடும்.

எப்போதும் ஆடியில் வரவேண்டிய நீர் தைமாதம் வெள்ளமாக வந்து வீணாகக் கடலில் சேரும். அறுவடைக்குத் தயாராகும் நெல்லைத் தலை

சாய்த்து ஆர்ப்பரிக்கும். பெய்யாமல் கெடுத்தது பாதி என்றால் பெய்து கெடுத்தது பாதி என்று கேடு முழுமையாகிறது. வெள்ள நிவாராணம் என்று விவசாயிகள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு அரசுடன்

மல்லுக்கு நிற்பது வாடிக்கை.

எனினும் குறுவை சாகுபடிக்கு காவிரியை நம்பும் காலம் மலையேறிவிட்டது. 30,

40 ஆண்டுகளுக்கு முன்பே நிலத்தடிநீர் பயனாகும் மரபை டெல்டா விவசாயிகள் கடைப்பிடித்து வருவது குறிப்பிடத்தக்கது.

மிகவும் தாமதமாக மேட்டூர் அணை திறந்து விடப்படுவதால் சம்பா அல்லது ஒருபோக சாகுபடிக்கு மட்டுமே மேட்டூர் தண்ணீர் உதவும்.

இங்கு நாம் காவிரி நதிநீர்ப் பங்கீடு பற்றி விவாதிப்பது வீண். காவிரி நீர்ப்பங்கீடு

குறித்து உச்சநீதிமன்றத் தீர்ப்பையே துச்சமெனத் தூக்கி எரியும் கர்நாடக அரசு, இன்று காவிரியின் உற்பத்திஸ்தானத்தைக்

காப்பாற்றிக் கொள்ளுமா? இந்தக் கேள்வியை சற்று ஆராய வேண்டும்.

1948-ஆம் ஆண்டு மைய அரசின் வேளாண்மை அமைச்சரகம் புவியியல்

அடிப்படையிலும், மண்ணின் தகுதி அடிப்படையிலும் மாநில வாரியாக உகந்த பயிர்கள் எவை எப்போது விதைப்பது போன்றவை

பற்றிய ஆவணத்தைத் தயாரித்துள்ளது. அதன் பெயர் வேளாண்மை பஞ்சாங்கம். ஆங்கிலத்தில் இதளுட இஅகஉசஈஉத என்று பல பதிப்புகள் வந்துள்ளன.

அதன் அடிப்படையில் கர்நாடக மாநிலத்தில் நெல் சாகுபடிக்கு ஏற்ற வண்டல் மண் அரிது என்பதால், குறிப்பிட்ட சில மாவட்டங்கள் நீங்கலாக அதிக அளவில் புஞ்சைப் பயிர்களே ஏற்றவை என்று

ஆலோசனை வழங்கியது. காலம் காலமாக அங்கு புஞ்சைப்பயிர்களே சாகுபடியாகி வந்துள்ளதையும் குறிப்பிட்டுள்ளது.

புஞ்சை என்றால் சோளம், கேழ்வரகு, கம்பு, தினை, வரகு, சாமையுடன் துவரை, பருத்தி போன்றவை. காவிரி டெல்டாப் பகுதிகளில் நெல் மட்டுமே பரிந்துரைக்கப்பட்டது. கோடைப்பயிராக நெல் வயலில்

உளுந்து, மக்காச்சோளம், பருத்தியும் சாகுபடி செய்யலாம். கர்நாடகத்தில் இயற்கைக்கு மாறாக புஞ்சை நிலம் நஞ்சையாவதும், காவிரி டெல்டாவில் நஞ்சை நிலம் புஞ்சையாவதும் நிகழ்ந்து வருகிறது.

கிருஷ்ணராஜசாகரம், துங்கபத்ரா, கபினி அணைகள் கட்டப்பட்டு நெல்லும் கரும்பும் கர்நாடகாவில் பயிரிட தமிழ்நாட்டு விவசாயிகள் குடியமர்த்தப்பட்டார்கள். நெல், கரும்பு சாகுபடி உத்திகள் கர்நாடக

விவசாயிகளுக்குத் தெரியாது.

இதெல்லாம் பழையகதை. இன்று கர்நாடக மாநிலத்தில் கரும்பு, நெல் பயிரிடும் தமிழ் விவசாயிகளும் உள்ளனர் என்பது இந்திய வேற்றுமைகளின் ஒற்றுமைக்கு அடையாளம் போலும். இனி காவிரியின்

பாதுகாப்பை கவனிப்போம்.

காவிரியின் உற்பத்தி இடம் கங்கையைப் போல் பனிமலை உருகி வரும் இடமல்ல. குடகுமலைப் பகுதியில் பெய்யும் மழையை காவிரி நம்பியுள்ளது. காவிரி உற்பத்தியாகும் மலைப்பகுதி வளம் குன்றா

பல்லுயிர்ப் பெருக்கத்தின் எடுத்துக்காட்டு. வளர்ச்சிக்காக அங்கு காபி பயிரிடப்பட்டாலும், மரங்களோடு இணைந்து நிழலில் காபி சாகுபடியாகிறது.

மரங்கள் வெட்டப்படுவது இல்லை. நிழலில் சிறிது மிளகு சாகுபடியும் உண்டு. ஏராளமான சுனைகளும் நீரூற்றுக்களும் மரங்களால் காப்பாற்றப்பட்டு பசுமை நீடிக்கின்றது. இப்போது அங்கு விளையும்

"நிழல் காபி'க்கு ஆபத்து வந்துவிட்டது. "நிழல் காபி'யுடன் சேர்ந்து மரங்களுக்கும் ஆபத்து. மரங்களுக்கு ஆபத்து என்றால் காவிரிக்கும் ஆபத்து. மரங்கள்தான் நீரூற்றுகளைக் கனியவைக்கின்றன.

காலம் காலமாக "நிழலில் காபி' பயிரானது. இப்போது காலம் மாறிவிட்டது. மரங்களை அழித்து "வெய்யில் காபி' பயிரிடத் தொங்கிவிட்டார்கள். வன வேளாண்மை அடிப்படையில் பயிராகும் "நிழல்

காபி'யை ஏக்கருக்கு 1 டன் வரை விளைவிக்கலாம். பலருக்கு 750 கிலோ மட்டுமே விளைகிறது.

நிழலில் "ஆர்கானிக் காபி', அதாவது தரமான காபி அறுவடை செய்யலாம். அதே சமயம் மரங்களை வெட்டிவிட்டு நிழலே படாமல் முழுக்க வெய்யில் படும்படி சாகுபடி செய்தால் 1 ஏக்கருக்கு 2 டன் (2000

கிலோ) விளைச்சல் எடுக்கலாம். "நிழல் காபி' என்றால் முழுக்கவும் நிழல் என்று பொருளல்ல, 50 சதவீதம் வெய்யிலும் கிட்டும்.

பல்லுயிர்ப்பெருக்க அடிப்படையில் இயற்கையை வருத்தாமல் "நிழல் காபி' பயிரிடும் விவசாயிகள், மரமில்லாமல் முழு"வெய்யில் காபி' சாகுபடி செய்யும் விவசாயிகள் அளவுக்கு லாபம்

ஈட்டமுடிவதில்லை. இப்படி இவர்கள் லாபம் பெறாவிட்டாலும் கூட நஷ்டத்தை ஈடுசெய்யும் அளவில் பல்லுயிர்ப் பெருக்கத்தைப் பாதுகாத்து வந்துள்ளனர். எனவே, வனவேளாண்மைக் காவலர் விருதுடன்,

ஆண்டுதோறும் "நிழல் காபி' மானியமும் வழங்க மைய அரசும், கர்நாடக அரசும் முன்வரவேண்டும். இல்லாவிட்டால் காவிரியின் உற்பத்தியிடம் வெப்பலாகி அங்குள்ள சுனைகளும் ஊற்றுக்களும் அழிந்து

விடும். "நிழல் காபி' சாகுபடி செய்வோர் வனத்துறையால் சங்கடத்திற்கும் ஆளாக நேரிடுகிறது. ஓர் அறுவடை முடிந்ததும் காபி வளரச் சற்று வெய்யில்படும் அளவில் மரக்கிளைகளை வெட்ட வனத்துறை

அனுமதி வேண்டும். கவாத்து செய்ய அனுமதி வழங்குவதில் தாமதமாகிறது. "நிழல் காபி' பயிரிடும் விவசாயிகள் மரங்களை வெட்டிவிட்டு "வெய்யில் காபி' பயிரிடத் தொடங்கிவிட்டதால் காவிரியின்

உற்பத்தி ஊற்றுக்கு ஆபத்து வந்துவிட்டது.

தவிரவும் குடகு மலைப்பகுதி சுற்றுலா மையமாகி விட்டதால் புதிய ஓட்டல்கள், தங்கும் விடுதிகள், கட்டடங்கள் காரணமாக, மரங்கள் வெட்டப்பட்டு இயற்கை சேதமுறுகிறது.

காலையில் எழுந்ததும் காபி கிடைத்தால் சரி. "நிழல் காபி' வந்தால் என்ன "வெய்யில் காபி' வந்தால் என்ன என்று மெத்தனமாயிருக்கக்கூடாது. "நிழல் காபி'யுடன் இணைந்த குடகுமலைப் பல்லுயிர்ப்

பெருக்கம் காப்பாற்றப்பட்டால்தான் காவிரி "நடக்கும்'.

காலம் செல்லச் செல்ல காவிரியே வற்றிவிடும் என்று காலநிலை மாற்றத்தை காரணம் காட்டி சூழலியல் வல்லுனர்கள் விடுக்கும் எச்சரிக்கையைப் புறக்கணிப்பதற்கில்லை.

கட்டுரையாளர்:

இயற்கை விஞ்ஞானி

ஆர்.எஸ். நாராயணன்

## தேனீ வளர்ப்புப் பயிற்சி

கும்மிடிப்பூண்டியை அடுத்த சிறுபுழல்பேட்டையில் 24 பயனாளிகளுக்கு தேனீ வளர்ப்புப் பயிற்சி அளிக்கப்பட்டது.

கும்மிடிப்பூண்டி சிப்காட் தொழிற்பேட்டையில் உள்ள ஹைடெக் கார்பன் தொழிற்சாலை, சென்னையைச் சேர்ந்த "பிளான்ட்' தன்னார்வ நிறுவனம் ஆகியன இணைந்து "காமதேனு' என்ற திட்டத்தின் கீழ், தேனீ வளர்க்கும் பயிற்சி அளித்தனர். ஊராட்சி தலைவர் ரவிக்குமார் தலைமை வகித்தார். செயலாளர் மூர்த்தி முன்னிலை வகித்தார். ஹைடெக் கார்பன் நிறுவன உற்பத்திப் பிரிவு மேலாளர் செந்தில்வேல் தியாகராஜன், பிளான்ட் நிறுவனர் ஜான் சுரேஷ் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாக கலந்துகொண்டனர்.

இதில், தேனீ வளர்ப்புப் பயிற்சியாளர் ஜோஸ்பின் தேனீ வளர்ப்பு குறித்து எடுத்துக் கூறினார். தொடர்ந்து பயிற்சியில் கலந்துகொண்டவர்களின் சந்தேகங்களுக்கு விளக்கம் அளிக்கப்பட்டது, இதில், சிறுபுழல்பேட்டை, ஆர்.என்.கண்டிகை, லஷ்மிபுரம், முத்தியால் ரெட்டி கண்டிகை, கோபால்ரெட்டி

கண்டிகை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 24 பேருக்கு தேனீ வளர்க்கும் பெட்டிகள் வழங்கப்பட்டன.

## அடுத்தடுத்து முகூர்த்த நாள்கள்:மல்லிகைப்பூ கிலோ ரூ.800-க்கு விற்பனை

அடுத்தடுத்து முகூர்த்த நாள்கள் வருவதால், திண்டுக்கல் பூச்சந்தையில் சனிக்கிழமை ஒரு கிலோ மல்லிகைப் பூ ரூ.800-க்கு விற்பனை செய்யப்பட்டது.

திண்டுக்கல் மற்றும் நிலக்கோட்டை பூச்சந்தைகளில், கடந்த சில நாள்களாக மல்லிகைப் பூ கிலோ ரூ.250 முதல் ரூ.350 வரை விற்கப்பட்டது. இந்நிலையில், ஞாயிறு மற்றும் திங்கள்கிழமைகளில் முகூர்த்த நாள் என்பதால், மல்லிகை, முல்லை மற்றும் ஜாதிப் பூக்களின் விலை 3 மடங்கு அதிகரித்தது. திண்டுக்கல் சந்தையில் சனிக்கிழமை காலை, மல்லிகைப் பூ கிலோ ரூ.800-க்கு விற்பனை செய்யப்பட்டது.

இதே போல், முல்லைப் பூ ரூ.650-க்கும், ஜாதிப் பூ ரூ.400-க்கும் விற்பனை செய்யப்பட்டன. வரத்து குறைவு காரணமாக சம்மங்கிப் பூ கிலோ ரூ.250 வரை விலை போனது. அதே நேரத்தில் வாடாமல்லி மற்றும் செண்டு மல்லிப் பூக்கள் கிலோ ரூ.10 முதல் ரூ.15 வரை மட்டுமே விலை போயின.

## விலையில்லா ஆடுகள்: பயனாளிகளைத் தேர்வு செய்ய ஆட்சியர் உத்தரவு

விலையில்லா ஆடுகள் வழங்கும் திட்டத்தில் தகுதியான பயனாளிகளைத் தேர்வு செய்யுமாறு ஆட்சியர் ச.ஜெயந்தி உத்தரவிட்டுள்ளார்.

கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் விலையில்லா ஆடுகள் வழங்கும் திட்டத்தின் கிராம அளவிலான தேர்வுக் குழுக் கூட்டம் திருப்பூர் மாவட்ட ஆட்சியரகத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இதற்கு தலைமை வகித்து ஆட்சியர் ச.ஜெயந்தி பேசியதாவது:

தமிழ்நாடு அரசின் விலையில்லா வெள்ளாடுகள் வழங்கும் திட்டத்தின் கீழ் திருப்பூர் மாவட்டத்தில் 2016-2017-ஆம் ஆண்டுக்கு 45 ஊராட்சிகளில் நான்கு கட்டங்களாக 3,024 பயனாளிகளுக்கு வெள்ளாடுகள் வழங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதன்படி, வரும் நவம்பரில் 12 ஊராட்சிகளில் 557 பயனாளிகளுக்கும், டிசம்பரில் 12 ஊராட்சிகளில் 1,141 பயனாளிகளுக்கும், 2017-ஆம் ஆண்டு ஜனவரியில் 12 ஊராட்சிகளில் 840 பயனாளிகளுக்கும், பிப்ரவரியில் 9 ஊராட்சிகளில் 486 பயனாளிகளுக்கும் விலையில்லா ஆடுகள் வழங்கப்படவுள்ளன. முதற்கட்டமாக நவம்பரில் அவிநாசி (ஆலத்தூர்), குடிமங்கலம் (ஆத்துகிணத்துப்பட்டி), காங்கயம் (பாலசமுத்திரம்புதூர், கணபதிபாளையம்), குண்டடம் (பெல்லம்பட்டி), மூலனூர் (எரிசனம்பாளையம், காளிபாளையம்), திருப்பூர் (ஈட்டிவீராம்பாளையம், காளிபாளையம்), உடுமலைப்பேட்டை (ஆலம்பாளையம்), ஊத்துக்குளி (ஏ.பெரியபாளையம், அணைப்பாளையம்) ஆகிய 12 ஊராட்சிகளில் 557 பயனாளிகளுக்கு விலையில்லா ஆடுகள் வழங்கப்படவுள்ளன. இதற்கான பயனாளிகளைத் தேர்வு செய்ய ஆகஸ்ட் 22-ஆம் தேதி (திங்கள்கிழமை) சிறப்பு கிராம சபைக் கூட்டம் நடத்தப்பட வேண்டும். பயனாளிகளை இறுதித் தேர்வு செய்ய ஆகஸ்ட் 29-ஆம் தேதி இரண்டாவது முறையாகக் கிராம சபைக் கூட்டம் நடத்தப்பட வேண்டும். கிராம அளவிலான தேர்வுக் குழுவில் இடம்பெறவுள்ள ஊராட்சித் தலைவர், ஊராட்சி துணைத் தலைவர், வயதில் மூத்த ஆதி திராவிட வார்டு உறுப்பினர், பில்.எல்.எப். ஒருங்கிணைப்பாளர், முன்னோடி சுய உதவிக் குழு உறுப்பினர், கால்நடை உதவி மருத்துவர், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் ஆகியோர் அடங்கிய குழுவினர் தகுதியான நபர்களைத் தேர்வு செய்ய வேண்டும் என்றார் ஆட்சியர்.

கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநர் (கூடுதல் பொறுப்பு) ஆறுமுகம், உதவி இயக்குநர்கள் மகேந்திரன், அன்வர்தின், தங்கவேலு, ஊராட்சித் தலைவர்கள் உள்ளிட்ட தேர்வுக்குழுவினர் கலந்துகொண்டனர்.

## வெள்ளாடு வளர்ப்பு: இலவசப் பயிற்சி

திருப்பூரில் வெள்ளாடு வளர்ப்புக் குறித்த இலவசப் பயிற்சி வரும் செவ்வாய்க்கிழமை, புதன்கிழமை ஆகிய இரு தினங்களுக்கு அளிக்கப்படவுள்ளது.

இதுகுறித்து கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள செய்தி:

திருப்பூர் கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் மாவட்டத்தில் உள்ள விவசாயிகள், கால்நடை வளர்ப்பில் ஆர்வம்

உள்ள பொதுமக்கள் பயன்பெறும் வகையில் மாதந்தோறும் கால்நடை வளர்ப்புக் குறித்த இலவசப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. அதன்படி, ஆகஸ்ட் 23, 24 ஆகிய தேதிகளில் வெள்ளாடு வளர்ப்புக் குறித்து இலவச பயிற்சி வகுப்பு காலை 10.30 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெறவுள்ளது.

இதில், விவசாயிகள், பொதுமக்கள் கலந்துகொண்டு பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**விலை வீழ்ச்சியால் வெங்காயத்தை அறுவடை செய்ய தயங்கும் விவசாயிகள்**

வெங்காயம் விலை வீழ்ச்சி காரணமாக அறுவடை செய்யாமல் விட்டதால் வயல் வெளிகளில் காய்ந்து வருகிறது. இதனால் ஏற்பட்டுள்ள பொருளாதார இழப்பால் விவசாயிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நாமக்கல் மாவட்டத்தில் குறுகிய காலப் பயிர் சாகுபடியில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர். குறிப்பாக வெங்காயம் சாகுபடி அதிகமாக செய்யப்படுகிறது. நடவு செய்து 60 நாள்களில் அறுவடை செய்யலாம்.

எருமபட்டி வட்டாரம் வளையபட்டி பகுதியில் 200 ஏக்கர் பரப்பளவில் வெங்காயம் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இந்தப் பகுதியில் விளையும் வெங்காயம் நாமக்கல் சந்தைக்கு விற்பனைக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. கடந்த சில நாள்களாக அறுவடை நடைபெற்று வருகிறது.

தற்போது விலை வீழ்ச்சியடைந்து கிலோ வெங்காயம் ரூ.5 முதல் ரூ.7 வரை விற்பனை செய்யப்படுகிறது. பலனுக்கு தயாராக உள்ள வெங்காயத்தை அறுவடை செய்து சந்தைக்கு அனுப்பினால் அதற்கான கூலி கூட கிடைக்காது என்பதால், அறுவடை செய்யாமல் நிலத்தில் அப்படியே விவசாயிகள் விட்டதால் காய்ந்து வருகிறது. சில இடங்களில் அறுவடை செய்யாமல் உழவுப் பணியை மேற்கொண்டுள்ளனர்.

இதுகுறித்து விவசாயிகள் கூறியது, வறட்சி காரணமாக தண்ணீர் பிரச்னை, நோய்த் தாக்குதல் போன்ற பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் வெங்காய பயிர்களைப் பாதுகாத்து பலனுக்கு வரும் நிலையில், விலை வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

கடந்த ஒரு மாதமாக கிலோ ரூ.10-க்கு விற்கப்பட்ட வெங்காயம் தற்போது ரூ. 5-ஆகக் குறைந்துள்ளது. இதனால், அறுவடை செய்யாமல் விட்டுள்ளோம். செலவு

செய்த பணத்தைக் கூட எடுக்க முடியாத நிலையில் பொருளாதார இழப்பு ஏற்பட்டுள்ளது என்றனர்.

## பரமத்திவேலூர் ஏலச் சந்தையில் வெல்லம் விலை உயர்வு

பிலிக்கல்பாளையம் ஏலச் சந்தையில் சனிக்கிழமை நடைபெற்ற ஏலத்தில் வெல்லம் அதிக விலைக்கு ஏலம் போனது.

சோழசிராமணி, கொத்தமங்கலம், ஜேடர்பாளையம், அய்யம்பாளையம், பிலிக்கல்பாளையம், கபிலர்மலை, பாண்டமங்கலம், வேலூர் உள்ளிட்ட பகுதிகளில் ஏராளமான ஏக்கரில் கரும்பு பயிரிடப்பட்டுள்ளது. இப்பகுதிகளில் ஆலைக்கு பதிவு செய்யப்படாத கரும்புகள் ஜேடர்பாளையம், சோழசிராமணி, பிலிக்கல்பாளையம், கபிலர்மலை, அண்ணாநகர் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள பல்வேறு வெல்லம் காய்ச்சும் ஆலைகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன.

அங்கு அச்சு வெல்லம், உருண்டை வெல்லங்கள் தயார் செய்யப்படுகின்றன. தயார் செய்யப்பட்ட வெல்லங்கள் 30 கிலோ கொண்ட சிப்பங்களாகக் கட்டப்பட்டு பிலிக்கல்பாளையம் வெல்ல ஏலச் சந்தைக்குக் கொண்டு வரப்படுகிறது.

இங்கு தரத்துக்கு ஏற்ப பிரிக்கப்பட்டு வாரத்தில் புதன்கிழமை, சனிக்கிழமைகளில் ஏலம் விடப்படுகிறது. இச்சந்தையிலிருந்து ஏலம் எடுக்கப்படும் வெல்லங்கள் லாரிகள் மூலம் வெளி மாவட்ட, மாநிலங்களுக்கும் அனுப்பி வைக்கப்படுகின்றன. கடந்த வாரம் நடைபெற்ற ஏலத்தில் 30 கிலோ கொண்ட அச்சு வெல்லம் சிப்பம் ஒன்று ரூ.1,300-க்கும், உருண்டை வெல்லம் ரூ.1,300-க்கும் ஏலம் போனது. சனிக்கிழமை நடைபெற்ற ஏலத்துக்கு 10 ஆயிரம் உருண்டை வெல்ல சிப்பங்களும், 7 ஆயிரம் அச்சு வெல்ல சிப்பங்களும் கொண்டு வரப்பட்டிருந்தன. ஏலத்தில் அச்சு வெல்லம் ரூ.1,350-க்கும், உருண்டை வெல்லம் ரூ.1,350-க்கும் ஏலம் போனது. கரும்பின் வரத்து குறைந்துள்ளதால் வெல்லம் விலை உயர்ந்ததாக விவசாயிகள் தெரிவித்தனர்.

## மேட்டூர் அணைக்கு நீர்வரத்து மேலும் அதிகரிப்பு

மேட்டூர் அணைக்கு நீர்வரத்து ஞாயிற்றுக்கிழமை காலை நொடிக்கு 6,160 கன அடியாக அதிகரித்துள்ளது.

கர்நாடக மாநிலத்தில் காவிரியின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் கடந்த சில நாள்களாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இந்த மழையின் காரணமாக கடந்த மூன்று நாள்களாக அணைக்கு நீர்வரத்து படிப்படியாக அதிகரித்து வருகிறது. இந்த நிலையில் சனிக்கிழமை காலை அணைக்கு நீர்வரத்து நொடிக்கு 5,083 கன அடியாக இருந்தது. இது ஞாயிற்றுக்கிழமை காலை நொடிக்கு 6,160 கன அடியாக அதிகரித்துள்ளது. அணையின் நீர்மட்டம் 65.46 அடியாக உயர்ந்துள்ளது. அணையிலிருந்து குடிநீர்த் தேவைக்காக நொடிக்கு 500 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. அணையின் நீர்இருப்பு 28.93 டி.எம்.சி.யாக இருந்தது.

## ஆக. 23 முதல் கறவை மாடு வளர்ப்புப் பயிற்சி

தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரகம் அருகேயுள்ள தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவிஸ்யல் மற்றும் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆய்வு மையத்தில் கறவை மாடு வளர்ப்பு மற்றும் முதலுதவி மூலிகை மருத்துவம் குறித்த இரு நாள் பயிற்சி முகாம் ஆக. 23-ம் தேதி தொடங்கி தொடர்ந்து 2 நாள்கள் நடைபெறவுள்ளது.

ஆக. 23-ம் தேதி காலை 9 மணி முதல் நடைபெறவுள்ள இப்பயிற்சிக்கு வரும் அனைவரும் தவறாமல் புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை அல்லது வேறு அடையாள அட்டை கொண்டு வர வேண்டும் என்றும், மேலும் விவரங்களுக்கு 90471 57859, 04362 - 204009 ஆகிய எண்ணில் தொடர்பு கொள்ளலாம் எனவும் மையத் தலைவர் என். புண்ணியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

## இறால் வளர்ப்பு குறித்து விழிப்புணர்வு முகாம்

இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் கீழ் இயங்கும் மத்திய உவர்நீர் மீன் வளர்ப்பு ஆராய்ச்சி நிலையம் சார்பில் நாகை அருகே சின்னத்தம்பூரில் இறால் வளர்ப்பு மற்றும் பண்ணை சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வு முகாம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

முகாமில் மத்திய உவர்நீர் மீன் வளர்ப்பு ஆராய்ச்சி நிலையத்தின் நோயியல் துறைத் தலைவர் எஸ்.ஆளவாண்டி பங்கேற்று பேசுகையில், "மத்திய உவர்நீர் மீன் வளர்ப்பு ஆராய்ச்சி நிலையத்தின் நோயியல் துறை விஞ்ஞானிகள் நேரிடையாக பண்ணைக்கு சென்று விவசாயிகளிடம் இறால், நீர், மண் மாதிரிகளைப் பெற்று வெண்புள்ளி வைரஸ் நோய், எண்டிரோசைடோசோயன் ஹிபட்டடோபினை நோய் ஆகியவை இறால்களை தாக்கியுள்ளதா என சோதனை செய்து பரிந்துரைகள் தெரிவித்துள்ளனர். மேலும் மண், நீர், குளத்து சூழலின் தன்மைகள், உப்புத்தன்மை, காரத்தன்மை, கடினத்தன்மை ஆகியவைகளும் பரிசோதிக்கப்பட்டு, பரிந்துரைகள் வழங்கப்பட்டுள்ளன' என்றார்.

தொடர்ந்து, இறால் விவசாயிகள்- மத்திய உவர்நீர் மீன் வளர்ப்பு ஆராய்ச்சி நிலையத்தின் நோயியல் துறை விஞ்ஞானிகள் கலந்துரையாடல் நடைபெற்றது. நோய் வரும் முன் இறால்களை காப்பது குறித்து விவசாயிகளுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டன.

நிகழ்ச்சியில் முதன்மை விஞ்ஞானிகள் டி.டி. விமலா, எம். முரளிதர், விஞ்ஞானிகள் எழில்பிரதிபா, சதீஸ்குமார், புவனேஸ்வரி, ஆனந்தராஜ், குமாரராஜா ஆகியோர் பங்கேற்றனர்.

## தமிழக அரசின் திட்டத்தால் சம்பா சாகுபடி அதிகரிக்கும்: அமைச்சர் ஓ.எஸ்.மணியன்

தமிழக அரசின் சம்பா சிறப்புத் தொகுப்புத் திட்டத்தால், நிகழாண்டில் நாகை மாவட்டத்தின் சம்பா நெல் சாகுபடி பரப்பு அதிகமாகும் என எதிர்பார்க்கப்படுகிறது என்று கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஓ.எஸ்.மணியன் தெரிவித்தார்.

நாகை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் சனிக்கிழமை நடைபெற்ற, பிரதமரின் பயிர் பாதுகாப்புத் திட்ட விழிப்புணர்வு கூட்டத்தில் அவர், மேலும் பேசியது:

வேளாண் உற்பத்தி 2 மடங்காவும், விவசாயிகளின் வருவாய் 3 மடங்காகவும் உயர வேண்டும் என்ற நோக்கத்தில் தமிழக அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இதன் மூலம், தமிழகத்தின் வேளாண் உற்பத்தி உயர்ந்து வருகிறது.

இந்திய அளவில் 45 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டுள்ள பிரதமரின் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்புத் திட்டம், தமிழகத்தில் நாகை, கடலூர் மாவட்டங்களில் மட்டும் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம் மூலம், நெல் பாதிப்புக்கு மட்டும் நிவாரணம் என்ற அளவீடு இல்லாமல், சாகுபடியின் எந்த நிலையில் பாதிப்பு ஏற்பட்டாலும், அதற்கு நிவாரணம் பெற முடியும். காவிரி டெல்டா விவசாயிகளின் வாழ்வாதாரத்தைப் பெருக்கும் வகையில் தமிழக அரசு, சம்பா சிறப்பு தொகுப்புத் திட்டத்தை அறிவித்துள்ளது. இதன் மூலம், நாகை மாவட்டத்தில் நிகழாண்டு சம்பா நெல் சாகுபடி பரப்பு, இயல்பு பரப்பை விஞ்சும் என எதிர்பார்க்கப்படுகிறது என்றார் அமைச்சர் ஓ.எஸ். மணியன்.

முன்னதாக, விவசாயக் கண்காட்சியை அமைச்சர் தொடங்கி வைத்தார். நிகழ்ச்சிக்கு, மாவட்ட ஆட்சியர் சு.பழனிசாமி தலைமை வகித்தார். சட்டப்பேரவை உறுப்பினர்கள் எம்.தமிமுன் அன்சாரி, எஸ்.பவுன்ராஜ், பி.வி.பாரதி, வி.ராதாகிருஷ்ணன், மாவட்ட ஊராட்சித் தலைவர் ஏ.கே.சந்திரசேகரன், வேளாண் இணை இயக்குநர் சேகர், வேளாண் அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் அ.அனுராதா உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**சித்தமல்லியில் நுண்நீர் பாசனத் திட்ட முகாம்**

நீடாமங்கலம் வட்டம், சித்தமல்லி வருவாய் கிராமத்தில் தோட்டக்கலைத்துறையின் மூலம் ஆடிப்பட்ட காய்கறி விதை மற்றும் திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு முகாம் அண்மையில் நடைபெற்றது.

தோட்டக்கலை துணை இயக்குநர் ஏ.இ. சுரேஷ்குமார் தலைமையேற்றார்.

ஊராட்சி மன்றத் தலைவர் ஏ. தமயந்தி அப்பாதுரை முன்னிலை வகித்தார். நீடாமங்கலம் வட்டார தோட்டக்கலைத்துறை அலுவலர் எம்.சத்யஜோதி வரவேற்றுப் பேசினார்.

முகாமில் உள்ளாட்சி பிரதிநிதிகள், விவசாயிகள் கலந்துகொண்டனர்.

இம்முகாமில் தோட்டக்கலை துணை இயக்குனர், துறையின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களான நுண்நீர் பாசனத் திட்டம், தெளிப்பு நீர் பாசனத் திட்டம், தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டம், ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டம், மண்மாதிரி சேமிப்பு ஆகிய திட்டங்கள் குறித்து விளக்கி கூறினார்.

மேலும் இம்முகாமில் 50-க்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு 100 ரூபாய் மானியத்தில் காய்கறி விதைகள் வழங்கப்பட்டன. இதற்கான ஏற்பாடுகளை மன்னார்குடி வட்டார தோட்டக்கலை உதவி அலுவலர்கள் இரா. அன்பரசன், க. தினேஷ்பாபு ஆகியோர் செய்திருந்தனர்.

**பாபநாசம் அணை நீர்மட்டம் 55 அடியாக குறைவு: மணிமுத்தாறு அணையிலிருந்து பாசனத்துக்கு 400 கனஅடி தண்ணீர் திறப்பு**

பாபநாசம் அணையின் நீர்மட்டம் வேகமாக குறைந்து வருவதையடுத்து, மணிமுத்தாறு அணையிலிருந்து பாசனத்துக்காக 400 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்ட நிகழாண்டு கார் பருவ சாகுபடிக்கு பாபநாசம், சேர்வலாறு அணைகளில் இருந்து முதல்கட்டமாக தண்ணீர் திறந்துவிடப்பட்டது.

தென்மேற்குப் பருவமழை தொடர்ந்து பெய்யாததால் பிரதான அணைகளின் நீர்மட்டம் உயரவில்லை. மேலும், நீர்இருப்பு வேகமாக குறைந்து வருவதால், பாசனத்துக்கு 600 கனஅடி மட்டும் தண்ணீர் திறந்துவிடப்பட்டது; கால்வாய்களில் 3 தினங்கள் தண்ணீர் திறக்கப்பட்டு, 3 தினங்கள் நிறுத்தப்படும் சுழற்சி முறை அமலுக்கு வந்தது.

ஞாயிற்றுக்கிழமை நிலவரப்படி பாபநாசம் அணையின் நீர்மட்டம் 55.30 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 324.07 கனஅடி நீர்வரத்து இருந்தது. சேர்வலாறு அணையின் நீர்மட்டம் 69.45 அடி, மணிமுத்தாறு அணை நீர்மட்டம் 64.79 அடியாக இருந்தது.

மணிமுத்தாறு அணைக்கு விநாடிக்கு 28 கனஅடி நீர்வரத்து இருந்தது. அணையிலிருந்து பெருங்கால் பாசனத்துக்கு மட்டும் 55 கனஅடி திறக்கப்பட்ட நிலையில், ஞாயிற்றுக்கிழமை முதல் தாமிரவருணி ஆற்றில் 350 கனஅடி தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது.

பாபநாசம் அணையின் நீர் இருப்பு வேகமாக குறைந்து வருவதால் பாசனத் தேவை மற்றும் தூத்துக்குடி மாவட்டத்தில் வாழைப் பயிருக்கு தண்ணீர் வழங்கும் வகையில் மணிமுத்தாறு அணையிலிருந்து கூடுதலாக தண்ணீர் திறக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தரப்பில் தெரிவித்தனர்.

பிற அணைகளின் நீர்மட்டம்: கடனாநதி அணை 51.50 அடி, ராமநதி அணை 54.75 அடி, குண்டாறு அணை 33.25 அடி, கருப்பாநதி அணை 24.77 அடி, அடவிநயினார் அணை 59.75 அடி, வடக்குப் பச்சையாறு அணை 13.30 அடி, நம்பியாறு அணை 11.32 அடி, கொடுமுடியாறு அணை நீர்மட்டம் 19.25 அடியாக இருந்தது.

அருவிகளில் கூட்டம்: கோடையை விஞ்சும் வகையில் வெப்பம் நிலவி வருவதால், பாபநாசம் அகஸ்தியர் அருவி, மணிமுத்தாறு அருவி, பாபநாசம் மற்றும் களக்காடு தலையணைப் பகுதிகளில் சுற்றுலாப் பயணிகளின் கூட்டம் அலைமோதியது. பல்வேறு பகுதியிலிருந்து 200-க்கும் மேற்பட்ட வாகனங்களில் சுற்றுலாப் பயணிகள் வந்ததால் பாபநாசம் அருவிப் பகுதியில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### அணைக்கட்டில் வண்டல் மண் அள்ள தகுதியான விவசாயிகளுக்கு அனுமதி

ஈரோடு: சூரம்பட்டி அணைக்கட்டில், இன்று முதல் மீண்டும் விவசாயிகள் வண்டல் மண் எடுத்து செல்வர் என, எதிர்பார்க்கப்படுகிறது. ஈரோட்டில் பெரும்பள்ளம் ஓடையின் நடுவே, சூரம்பட்டி அணைக்கட்டு கட்டப்பட்டுள்ளது. பல ஆண்டுகளாக தூர் வாராததால், வண்டல் மண் தேங்கியுள்ளது. இதனால், தண்ணீரை அதிக அளவில் சேமிக்க முடிவதில்லை. இந்நிலையில் மாவட்டத்தில் உள்ள ஏரி, குளங்களில் உள்ள வண்டல் மண்ணை விவசாயிகள் எடுத்து செல்லலாம் என்று, கலெக்டர் சமீபத்தில் உத்தரவு பிறப்பித்தார். இரண்டு நாட்களுக்கு முன், சூரம்பட்டி அணைக்கட்டில், டிப்பர் லாரிகள் மூலம் காலை முதல் மாலை வரை, வண்டல் மண்ணை பலர் அள்ளி சென்றனர். இதில், பலர் விவசாயிகள் இல்லை என புகார் எழுந்தது. பொதுப்பணித்துறை அலுவலகத்தில் முறையான ஆவணங்களான பட்டா, சிட்டா, குறிப்பேடுகளுடன் விவசாயிகள் அணுகினர். அவர்களுக்கு, இன்று அனுமதி வழங்கப்படும் எனத் தெரிகிறது. இதையடுத்து அவர்கள், வண்டல் மண்ணை அள்ளிச் செல்வர்.

### கொன்றை மலரை வளர்த்தால் வருமானம்

பந்தலுார்: 'மலைபாதையில் அதிகளவில் காணப்படும், மஞ்சள் நிற மலைக் கொன்றை மலர்களை அதிகளவில் வளர்த்தால் லாபம் கிடைக்கும்' என, தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீலகிரியில் ஆங்கிலேயர் காலத் தில், உருவாக்கப்பட்ட தேயிலை தோட்டங்களுக்கு மத்தியிலும், தோட்டங்களின் சாலையோரங்களிலும் மருத்துவ குணம் கொண்ட பல்வேறு பூக்கள் பூக்கும் மரங்களை நடவு செய்தனர்.

இதில், சேவல் கொண்டை மலர்கள் தற்போது சாலையோரங்களில், சிகப்பு நிறத்தில் பூத்துக்குலுங்குகிறது.
இந்த மரங்களில் இருந்து வரும் வாசனை மூலம் மலேரியாவை பரப்பும் கொசுக்கள் அழிவதாக கூறப்படுகிறது.

இந்நிலையில், பந்தலுார் பகுதியில், தற்போது மஞ்சள் நிறத்தில் மலைக்கொன்றை மலர்களும் பூத்து காணப்படுகிறது. பசுமையான தேயிலை தோட்டங்களுக்கு மத்தியில் மஞ்சள் நிறத்தில் காணப்படும் இந்த பூக்கள், எவ்வளவு துாரத்தில் இருந்து பார்த்தாலும் அழகாக காட்சியளிக்கிறது.

கேரள மாநிலம் கோழிக்கோடு, வயநாடு பகுதிகளிலிருந்து இந்த வழியாக வந்து செல்லும் சுற்றுலாப்பயணிகள், இந்த மரங்களின் முன்பாக சென்று, 'போட்டோ' எடுத்து, மகிழ்ச்சியுடன் செல்கின்றனர்.

கோவையில் இருந்து வந்திருந்த சுற்றுலா பயணி ரகீம் கூறுகையில், “இந்த மலர்களின் மர நாற்றுகளை, சுற்றுலா மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் நடவு செய்து வளர்த்தால், கொய் மலர் விற்பனை போல, இதனையும், வீடுகள் மற்றும் ஓட்டல்களில் அலங்காரத்துக்கு பயன்படுத்த முடியும். கேரளாவில், இத்தகைய மலர்களுக்கு, பண்டிகை காலங்களில் நல்ல கிராக்கி உள்ளது.

"இங்கும் இதன் உற்பத்தியை அதிகரிக்க, அரசு நிறுவனங்கள் நடவடிக்கை எடுத்தால், விவசாயிகள் பயன்பெற வாய்ப்புள்ளது. சுற்றுலாவினால் வரும் வருமானமும் பெருகும்,” என்றார்.

## கறவை மாடு வாங்க கடன் : பயனாளிகளுக்கு அழைப்பு

ஊட்டி: 'தாழ்த்தப்பட்ட, பழங்குடியினத்தவருக்கு, மானியத்தில் கறவை மாட்டுக் கடன் வழங்கப்படுகிறது' என, தெரிவிக்கப்பட்டது.

நீலகிரி கலெக்டர் அலுவலகத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் பாஸ்கரபாண்டியன் தலைமையில், விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடத்தப்பட்டது.
மாவட்ட தோட்டக்கலை இணை இயக்குனர் மணி உட்பட பிற துறை சார்ந்த அலுவலர்கள் பங்கேற்றனர். ஏற்கனவே, விவசாயிகளிடம் இருந்து பெறப்பட்ட, 30 மனுக்கள் மீது விவாதம் நடத்தப்பட்டு, தீர்வு வழங்கப்பட்டது.

*'தோட்டக்கலை துறை சார்பில், ஸ்ட்ராபெரி நாற்றுகள் வழங்கும் திட்டமில்லை; நாற்று வளர்ப்புக்கு தேவையான, நிலப்போர்வை ஷீட்டுக்கு, ஒரு எக்டருக்கு, 10 ஆயிரம் ரூபாய் மானியம் வழங்கப்படும்' என, தோட்டக்கலை துறை சார்பில் தெரிவிக்கப்பட்டது.

* 'ஆவின்' அதிகாரிகள் கூறுகையில், 'மத்திய, மாநில அரசுகளின் கறவை மாட்டுக் கடன் திட்டம் மூலம், பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு, தேசிய மற்றும் கூட்டுறவு வங்கிகள் மூலம் கடன் வழங்கப்பட்டு வருகிறது. 'நபார்டு' வங்கி மூலம் தாழ்த்தப்பட்ட, பழங்குடியின உறுப்பினர்களுக்கு, 33.33 சதவீத மானியத்துடன், கறவை மாட்டுக் கடன் வழங்கப்பட்டு வருகிறது,' என்றனர்.

* வருவாய் துறையினர் கூறுகையில்,'ஊட்டி நகரில், கிழக்கு மற்றும் மேற்கு வருவாய் கிராமங்களின் வருவாய் ஆவணங்கள், கம்ப்யூட்டர் மயமாக்கப்படவில்லை; இதுதொடர்பாக அரசாணை வந்த பின், கம்ப்யூட்டர் வழி சிட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்' என, தெரிவிக்கப்பட்டது.

* 'நீலகிரி எம்.பி., உள்ளூர் வளர்ச்சி திட்டத்தின் கீழ், தாம்பட்டியிலிருந்து காட்டேரி வரையுள்ள ஓடையை துார்வார மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது; நிர்வாக அனுமதி கிடைத்தவுடன் பணி துவங்கும்' என, வேளாண்மை பொறியியல் துறையினர் தெரிவித்தனர்.

* தேயிலை வாரிய அதிகாரிகள் கூறுகையில்,'மத்திய அரசின், 'பான் இந்தியா' நடைமுறைக்கு வந்த பின், 'டீ சர்வ்' ஏல மையத்தை அத்திட்டத்தில் இணைக்க நடவடிக்கை எடுக்கப்படும்' என்றனர்.

* 'தமிழ்நாடு ஊரக சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ், 2016--2017ல், 40 லட்சம் ரூபாய் மதிப்பில், ஆடாசோலை முதல் அணிக்கொரை சாலை வரை

சீரமைக்கப்பட உள்ளது' என, வட்டார வளர்ச்சித் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

**காபி விவசாயிகள் கவனத்திற்கு..**

தாண்டிக்குடி: காபி பயிரிடும் பகுதியில் காய்த்துளைப்பான் தாக்குதல் பரவலாக காணப்படுகிறது. காபி காய்கள் முற்றாத நிலையில் நுனிப்பகுதி வழியாக காய்த்துளைப்பான் பரவியுள்ளது.

ஜூலையில் தென் மேற்கு பருவ மழை பெய்யாமல் ஏற்பட்ட இடைவெளி மற்றும் இடையிடையே பெய்த மழையால் எதிர்பார்த்ததை விட வேகமாக காபி பருப்பு முதிர்ந்ததால், காய்த்துளைப்பான் புழு உள்ளே செல்லும் சூழல் உள்ளது.

இதற்கு குளோரிபைரிபாஸ் 20 இ.சி 600 மி.லி., தண்ணீரில் 200 மில்லி ஒட்டும் திரவத்துடன் சேர்த்து காய்கொத்துகளின் மீது படுமாறு தெளிக்க வேண்டும்.

தாமதப்படுத்தினால் மருந்து தெளித்தும் பலனில்லாமல் போகும். காபி விவசாயிகள் பாதிப்பை சரிசெய்ய உடனடியாக தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என, ஆராய்ச்சி இயக்குநர் அறிவுறுத்தியுள்ளார்.

**கரும்பு சாகுபடி கருத்தரங்கம்**

கள்ளக்குறிச்ச: கள்ளக்குறிச்சியில் கரும்பு இயந்திர அறுவடைக்கான புதிய சாகுபடி முறை குறித்த கருத்தரங்கம் நடந்தது.

நீலமங்கலத்தில் நடந்த கருத்தரங்கத்திற்கு, கள்ளக்குறிச்சி-2 கூட்டுறவு சர்க்கரை ஆலைத்தலைவர் வடிவேல் தலைமை தாங்கினார். கரும்பு பெருக்கு அலுவலர் மாமுண்டி வரவேற்றார்.

சிவகங்கை சக்தி சர்க்கரை ஆலை பொதுமேலாளர் உத்தண்டி, கடலூர் கரும்பு ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் துரைசாமி, சக்திமான் அக்ரோ நிறுவன பொதுமேலாளர் ஜெயராமன், நியூ ஹாலந்து கிராப் சொல்யூஷன்ஸ் முதுநிலை மேலாளர் பாஸ்கர் ஆகியோர் பேசினர்.

இதில் ஆலையின் நிர்வாகக்குழு இயக்குனர்கள் சுப்ரமணியன், குருநாதன், சத்தியமூர்த்தி, முனுசாமி, பெரியசாமி, பாலசுப்ரமணியன், முன்னோடி விவசாயிகள் அருணாசலம்பிள்ளை, ஆறுமுகம், முகமதுஅலி, முருகன், செல்லதுரை உள்ளிட்ட பலரும் பங்கேற்றனர். கரும்பு அலுவலர் வில்லியம் ஆண்டனி நன்றி கூறினார்.

## பள்ளியந்தூர் கிராமத்தில் இயந்திர நெல் நடவு ஆய்வு

விழுப்புரம்: பள்ளியந்தூர் கிராமத்தில் இயந்திர நெல் நடவுப் பணியை, வேளாண் உதவி இயக்குனர் குமாரி ஆனந்தி ஆய்வு செய்தார்.

இயந்திரம் மூலம் நெல் நடவு செய்யும் விவசாயிகளுக்கு தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் தமிழக அரசு மானிய தொகை வழங்க உள்ளது. அதன்படி, விழுப்புரம் அடுத்த காணை வட்டாரம், பள்ளியந்தூர் கிராமத்தில் இயந்திரம் மூலம் நெல் நடவுப் பணி நடந்தது. இதனை, வேளாண் உதவி இயக்குனர் குமாரிஆனந்தி நேரில் ஆய்வு செய்தார்.

பின்னர், இம்முறையில் நடவு செய்வதால் விதையளவு, பராமரிப்பு செலவு குறைகிறது. கூடுதலாக துார்கள், மகசூல் மற்றும் வருவாய் கிடைக்கிறது. இம்முறையை ஊக்கப்படுத்த வேளாண்துறை எக்டருக்கு 5 ஆயிரம் ரூபாய் மானியம் வழங்குகிறது.

இதனைப் பெற இயந்திர நடவு செய்த ரசீது, நடவின்போது எடுத்த புகைப்படம், சிட்டா அடங்கல், வங்கிக் கணக்கு போன்ற விபரங்களுடன் முறையாக விண்ணப்பிக்க வேண்டும் என உதவி இயக்குனர் தெரிவித்தார்.

ஆய்வின்போது, வேளாண் அலுவலர் பாலமுருகன் மற்றும் துணை வேளாண் அலுவலர், உதவி வேளாண் அலுவலர்கள், அட்மா திட்ட அலுவலர்கள், விவசாயிகள் பலரும் உடனிருந்தனர்.

## வேளாண்மை மையம் சார்பில் பார்த்தீனியம் குறித்த விழிப்புணர்வு

குளித்தலை: கரூர் மாவட்டம், குளித்தலை அடுத்த புழுதேரி சரஸ்வதி வேளாண் மையத்தில் நேற்று முன்தினம், பார்த்தீனிய செடி அழிப்பு குறித்து விழிப்புணர்வு முகாம் நடந்தது. மையத்தின் ஒருங்கிணைப்பாளர் திரவியம் தலைமை வகித்து பேசியதாவது: பொது மக்களுக்கும், விவசாய தொழிலுக்கும் நச்சுத்தன்மை வாய்ந்தது பார்த்தீனியம் செடியாகும். இச்செடி, காற்றின் மூலம் வேகமாக பரவக்கூடியது. மழைக்காலத்தில், ஒரு மீட்டர் முதல், இரண்டு மீட்டர் உயரம் வரை வளரக்கூடியது. அனைத்து காலத்திலும் பூக்கும் பருவம் கொண்டது. இதனால், மனிதர்களுக்கு தோல்நோய், சுவாச குழாய் பாதிப்பு ஏற்படும் நச்சுத்தன்மை வாய்ந்த வேதிப்பொருள் அதிகளவு உள்ளது. இச்செடியை எளிதில் கட்டுப்படுத்த

முடியும். செடியை பூக்கல் நிலைக்கு முன், கை உறை போட்டுகொண்டும், எந்திரத்தினாலும் அகற்றலாம். இவ்வாறு அவர் கூறினார். தொழில நுட்ப வல்லுனர்கள் தமிழ்செல்வி, திருமுருகன், ஆய்வக உதவியாளர் கருப்பசாமி, விவசாயிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## சூரியகாந்தி சாகுபடி: விவசாயிகள் தீவிரம்

கிருஷ்ணராயபுரம்: கிருஷ்ணராயபுரம் பகுதியில் பரவலாக சூரியகாந்தி சாகுபடி செய்யப்பட்டுள்ளதால், செடிகள் பூக்கள் பிடித்து பூத்துள்ளது. கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் அடுத்த மாயனூர், மணவாசி, சேங்கல், வரகூர் குழந்தைபட்டி, மத்திபட்டி போன்ற பகுதிகளில், கிணற்றுப்பாசன முறையில் எண்ணெய் வித்து பயிரான சூரியகாந்தி சாகுபடி, 500க்கும் மேற்பட்ட ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ளது. தற்போது, சூரியகாந்தி செடிகள் வளர்ச்சிடைந்தது செடிகளில் விதை பிடிப்பதற்கான பூக்கள் பிடித்து பூத்துள்ளது. இதன்மூலம் நீண்ட இடைவெளி பின், சூரியகாந்தி சாகுபடி விவசாயிகள் செய்து வருவதால், இப்பகுதியில் சாகுபடி செய்யபட்டுள்ள சூரியகாந்திக்கு நல்ல விலை கிடைக்கும் நம்பிக்கையில், விவசாயிகள் உள்ளனர்.

## கோழிக்கொண்டை பூ சாகுபடி... தீவிரம் செலவு குறைவால் விவசாயிகள் ஆர்வம்

தேனி: தேனி அருகே கிணற்றுப்பாசனத்தில் ஏராளமான விவசாயிகள் கோழிக்கொண்ட பூ சாகுபடி செய்துள்ளனர். குறைந்த செலவில் நிறைந்த வருமானம் தருவதால் பலரும் இதில் ஆர்வம் காட்டுகின்றனர்.

தேனி அருகே குன்னுார், அரைப்படிதேவன்பட்டி, கொடுவிலார்பட்டி, சிவலிங்கநாயக்கன்பட்டி, ஸ்ரீரெங்கபுரம், அம்மச்சியாபுரம், மார்க்கையன்கோட்டை, உப்பார்பட்டி மற்றும் அதன் சுற்றுப்புற கிராமங்களில் பெரும்பாலான விவசாயிகள் தலா ஒன்று முதல் 4 ஏக்கர் வரை கோழிக்கொண்டை பூ சாகுபடி செய்துள்ளனர்.

கிணற்றுப்பாசனம்

மழையின்றி கண்மாய் மற்றும் ஆற்றுப்பாசனம் கைவிட்டதால், இதற்கு கிணற்று பாசனத்தை நம்பி உள்ளனர். வாரத்திற்கு இரு முறை தண்ணீர் பாய்ச்சல் மற்றும் களை எடுப்பு, உரமிடுதல் போன்ற செலவுகள் குறைவால் இதில் பலரும் ஆர்வம் காட்டுகின்றனர். சீசன் நேரங்கள் மட்டுமின்றி அனைத்து நாட்களிலும் இந்த பூவுக்கு கிராக்கி உள்ளது. இப்பூவை சேர்த்தால்தான் மாலைக்கே தனி அழகு ஏற்படும். இதனால் வியாபாரிகள் போட்டிக் கொண்டு கொள்முதல் செய்கின்றனர்.

உப்பார்பட்டி விவசாயி கிருஷ்ணன் கூறுகையில்,“ 4 ஆண்டுக்கும் மேலாக கோழிக்கொண்டை பூ சாகுபடி செய்து வருகிறேன். கிணற்று பாசனத்தை நம்பியே விவசாயத்தில் ஈடுபட்டுள்ளோம். தண்ணீர், களை எடுப்பு உள்ளிட்ட பணிகளை முறையாக செய்வதின் மூலம் 75 நாட்களில் பூக்க துவங்கிவிடும்.

நன்றாக மலர்ந்தவுடன் வாரத்திற்கு இரு நாட்கள் பறித்தால் ஏக்கருக்கு 40 கிலோ வரை மகசூல் கிடைக்கும். பறிப்பு கூலியாக ஒருவருக்கு ரூ. 150 வழங்கப்படுகிறது. பறிக்கப்படும் பூ தேனி மற்றும் ஆண்டிபட்டி பகுதியில் உள்ள மொத்த வியாபாரிகளிடம் விற்கப்படுகிறது. தற்போது கிலோ ரூ.40 முதல் ரூ.45 வரை விலை உள்ளது. விவசாய செலவு போக, மாதத்திற்கு ரூ. 15 ஆயிரம் வருமானம் கிடைத்து வருகிறது,”என்றார்.

**கால்நடை மருந்தகங்களுக்கு ஸ்கேன் கருவி வழங்க அனுமதி**

கம்பம்: வட்டார வாரியாக கால்நடை மருந்தகங்களுக்கு ஸ்கேன் கருவி வழங்க கால்நடை பராமரிப்புத் துறை அனுமதி வழங்கியுள்ளது.

பசு,எருமை, ஆடு, கோழி, நாய் உள்ளிட்ட பல்வேறு கால்நடைகளின் கர்ப்பம் மற்றும் பல்வேறு நோய்கள் பற்றி தெரிந்து கொள்ள ஸ்கேன் பயன்படுகிறது. கடந்தாண்டு தேனியில் உள்ள அரசு கால்நடை மருத்துவமனைக்கு ஸ்கேன் வழங்கப்பட்டது.

தற்போது மாவட்டத்தில் வட்டாரவாரியாக கால்நடை மருந்தகங்களுக்கு ஸ்கேன் வழங்க அரசு அனுமதி வழங்கியுள்ளது.

கால்நடை பராமரிப்புத் துறையினர் கூறுகையில், 'பசு மற்றும் எருமை மாடுகளில் 45 நாட்களில் சினை பற்றி தெரிந்து கொள்ளவும், பிற கால்நடைகளுக்கு ஏற்படும் நோய்கள் பற்றி தெரிந்து கொண்டு அதற்கேற்ற சிகிச்சையளிக்கவும் ஸ்கேன் பயன்படுகிறது. மாவட்ட தலைநகரத்தில் உள்ள ஸ்கேன் மொபைல் யூனிட் என்பதால் ரூ. 7 லட்சம் வரை கொடுக்க வேண்டியிருந்தது. ஆனால் தற்போது

மருந்தகங்களுக்கு கொடுக்கும் ஸ்கேன் ரூ. 2 லட்சம் வரை தான் ஆகும். எனவே விரைவில் வட்டார அளவில் ஸ்கேன் கருவி பொருத்தப்படும். இதன் மூலம் சினை உறுதி செய்தல், கால்நடைகளுக்கு வயிற்று நோய்கள் பற்றி எளிதாக தெரிந்து கொண்டு சிகிச்சையளிக்க முடியும்' என்றனர்.

## பயறு விதை உற்பத்திக்கு ஊக்கத்தொகை அதிகரிப்பு

காரைக்குடி: பயறு விதைகளை உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை அதிகரிக்கப்பட்டுள்ளது.

சாக்கோட்டை வேளாண் உதவி இயக்குனர் சாந்தி கூறியதாவது: பயறு வகை சாகுபடிக்கு நல்ல தரமான சான்று பெற்ற உயர்ரக விளைச்சல் ரகங்களை தேர்வு செய்ய வேண்டும். அவற்றை உயிர் உரங்களான ரைசோபியம், பாஸ்போ பாக்டீரியா, டிரைக்கோடெர்மா விரிடி (4 கிராம்/கிலோ) பூஞ்சாணத்தை கொண்டு விதை நேர்த்தி செய்ய வேண்டும். பரிந்துரைத்த இடைவெளியில், ஒருங்கிணைந்த உர நிர்வாகம், பூச்சி மற்றும் நோய் நிர்வாகம் முறைகளை பின்பற்ற வேண்டும்.

பூக்கும் பருவத்தில் 2 சதவீத டி.ஏ.பி., கரைசலை தெளிக்க வேண்டும். தெளிப்பானை பயன்படுத்தி நீர் ஊற்ற வேண்டும். இதன்மூலம் விளைச்சலை அதிகரிக்கலாம்.

நமது பகுதிக்கு உளுந்து (ஏடிடீ3, ஏடிடீ5, ஏபிகே1, வம்பன் 5, வம்பன் 6, வம்பன் 7, கோ 6), பாசிப்பயறு (வம்பன் 2, 3, ஏ.டி.டீ 3, 5, கோ 6,7), துவரை (வம்பன் 3, ஏபிகே 1, கோ (ஆர்ஜி 7) ஆகியவை ஏற்ற ரகங்கள். தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தில் இயந்திரம் மூலம் நெல் நேரடி வரிசை விதைப்பு, வரப்பில் பயிறு சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு ரூ.7,500 மானியத்தில் விதைகள், இடுபொருட்கள் வழங்கப்படும்.

பத்து ஆண்டுக்கு பயறு விதைகளை உற்பத்தி செய்யும் விதை பண்ணை விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை கிலோவுக்கு ரூ.10ல் இருந்து ரூ.25 அதிகரிக்கப்பட்டுள்ளது.

விவசாயிகள் வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தை அணுகி பயன்பெறலாம், என்றார்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### விதைபண்ணை ஆய்வு

விக்கிரவாண்டி, : விக்கிரவாண்டி வட்டார வேளாண்துறை சார்பில் விக்கிரவாண்டி பகுதியில் மேம்படுத்தப்பட்ட வெள்ளை பொன்னி நெல், வம்பன் 4, உளுந்து ஆகிய ரகங்கள் விதைப்பண்ணை அமைக்கப்பட்டுள்ளது. விழுப்புரம் வேளாண்மை இணை இயக்குநர் ராமலிங்கம் வயல்களில் நேரடியாக சென்று விதைப்பண்ணை மற்றும் தினை சாகுபடி வயல்களை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இதில் வேளாண் உதவி இயக்குநர் செல்வபாண்டியன், விதை உதவி அலுவலர் ரகோத்தமன், உதவி அலுவலர் குமார், தொழில்நுட்ப மேலாளர் சாம்பசிவம் ஆகியோர் உடனிருந்தனர்.

### எண்ணெய் பனை பயிரிட்டால் அதிக லாபம்

விழுப்புரம், :விழுப்புரம் அருகே பிடாகம் கிராமத்தில் எண்ணெய் பனை பழக்குலைகள் கொள்முதல் மையம் செயல்பட்டு வருகிறது. எண்ணெய் பனை கொள்முதல் மைய பணிகளை வேளாண் உதவி இயக்குநர் கென்னடிஜெபக்குமார் ஆய்வு செய்து விவசாயிகளிடம் கூறியதாவது:

நமது நாடு உணவு தானிய உற்பத்தியில் தன்னிறைவு அடைந்து பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் நிலையில் உள்ளது. ஆனால் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தியில் தன்னிறைவு அடையவில்லை. ஆண்டுதோறும் சுமார் 50லட்சம் டன் சமையல் எண்ணெய் பிற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்து வருகிறோம். இது வரும் ஆண்டில் 80 லட்சம் டன் எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. மொத்த சமையல் எண்ணெய் இறக்குமதியில் பாமாயிலின் அளவு 60 சதவீதம் ஆகும்.

பாமாயில் பயிரில்இருந்து ஒரு எக்டருக்கு 4000 முதல் 6000 கிலோ வரை எண்ணெய் கிடைக்கிறது. ஆனால் நிலக்கடலை, சூரியகாந்தி மற்றும் எள்

பயிரிலிருந்து ஒரு ஹெக்டேருக்கு 200 முதல் 500 கிலோ வரை மட்டுமே சமையல் எண்ணெய் கிடைக்கிறது. எண்ணெய் பனையிலிருந்து மற்ற எண்ணெய் வித்து பயிர்களைவிட சுமார் 10 மடங்கு எண்ணெய் உற்பத்தி அதிகமாக கிடைக்கிறது.

எனவே எண்ணெய் பனை சாகுபடியை அதிகரிக்க தமிழக அரசு எண்ணெய் பனை சாகுபடிக்கு முதல் நான்கு ஆண்டுகளுக்கு ஹெக்டேர் ஒன்றிற்கு 2 ஆயிரம் வரை கன்றுகள், உரங்கள், நுண்ணுரங்களுக்கும் மானியம் வழங்குகிறது. நடவு செய்த மூன்றாம் ஆண்டிலிருந்து 40 ஆண்டுகள் வரை தொடர்ந்து மகசூல் அளிக்கிறது. தற்போது ஒரு டன்னிற்கு ரூ.6 ஆயிரத்து 375 கொள்முதல் விலை நிர்ணயம் செய்துள்ளது. விவசாயிகளுக்கு கொள்முதல் செய்யும் பணம் வங்கி கணக்கில் வரவு வைக்கப்படுகிறது. நிலையான வருமானம் பெற விரும்பும் பெரிய விவசாயிகளுக்கு ஏற்ற பயிர் பாமாயில் பயிர். இத்திட்டத்தில் விவசாயிகள் பயன்பெற உதவி வேளாண்மை அலுவலர் மற்றும் வேளாண்மை துறை அலுவலகங்களை அணுகி பயன்பெறலாம் என்றார். அப்போது வேளாண் மை அலுவலர் செந்தில்குமார், கங்காகவுரி, ஜோதிமணி, வேல்முருகன். பழக்குலைகள் கொள்முதல் மையம் அதிகாரிகள் மேரிச்செல்வன், ராஜாராம் உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.

## ஏ.கொத்தப்பள்ளியில் துவரை நாற்று நடவு தொழில் நுட்ப பயிற்சி

தேன்கனிக்கோட்டை : கெலமங்கலம் அருகே உள்ள ஏ.கெத்தப்பள்ளி கிராமத்தில், வேளாண் தொழில்நுட்ட முகமை (அட்மா) திட்டத்தின் கீழ் துவரை நாற்று நடவு ஒரு நாள் பயிற்சி நடைபெற்றது. கிருஷ்ணகிரி மாவட்ட வேளாண் இணை இயக்குநர் முருகு தலைமை வகித்து பேசுகையில், துவரை நாற்று தொழில்நுட்பத்தை கடைப்பிடித்தால், உரிய பருவத்தில் துவரை சாகுபடி செய்ய முடியும். துவரை பயறுக்கு வறட்சியை தாங்கும் சக்தி கிடைக்கும்.

விவசாயிகளுக்கு தேவையான துவரை நாற்றுகள் சமுதாய நாற்றங்கால் அமைத்து, அதன் மூலம் வினியோகிக்கப் படுகின்றது. துவரை பயர் சாகுபடியின் போது, தங்கள் பகுதிக்கு ஏற்றார் போல் உயர் விளைச்சல் ரகங்களை தேர்வு செய்து நடவு செய்து, துவரை நாற்று நடவு தொழில்நுட்பத்தை கடைப்பிடித்தால் பயறு எண்ணிக்கை குறையாமல் காக்கப்படும். துவரை பூக்கும் தருவாயில் 15

நாட்களுக்கு பிறகு இரண்டு முறை டிஏபி 2 சதவித கரைசலை காலை, மாலை வேளைகளில் தெளித்தால் அதிக பூக்கள் பூக்கும், பூத்த பூக்கள் உதிர்வதில்லை காய்களின் எண்ணிக்கை அதிகரிப்பதுடன், காய்கள் திறட்சியாக இருக்கும் 20 சதவீதம் மகசூல் அதிகரிக்கும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## வேளாண் விற்பனை மையத்தில் 800 மூட்டை மஞ்சள் ரூ.40 லட்சத்திற்கு ஏலம்

ஆத்தூர் : ஆத்தூர் புதுப்ெபட்டை வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை மையத்தில் 800 மூட்டை மஞ்சள் □40 லட்சத்திற்கு ஏலம் போனது. ஆத்தூர் புதுப்பேட்டையில் உள்ள வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் வாரம்தோறும் சனிக்கிழமை இரவு மஞ்சள் ஏலம் நடைபெறுவது வழக்கம். நேற்று முன்தினம் நடந்த மஞ்சள் ஏலத்தில் ஆத்தூர், பெரம்பலூர், வாழப்பாடி, சின்னசேலம் மற்றும் விழுப்புரம் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் 800 மூட்டை மஞ்சளை கொண்டு வந்திருந்தனர்.

பின்னர், நடைபெற்ற ஏலத்தில் சேலம், ஈரோடு, திருப்பத்தூர் பகுதியை ேசர்ந்த வியாபாரிகள் கலந்து கொண்டனர். இதில் விரலி ரகம் மஞ்சள் குவிண்டால் ரூ.6009 முதல் ரூ.9810 வரையும், உருண்டை ரக மஞ்சள் ரூ.4 ஆயிரம் முதல் ரூ.8400 வரையும் ஏலம் போனது. ஆகமொத்தம் 800 மூட்டை மஞ்சள் ரூ.40 லட்சத்திற்கு விற்பனையானது.

## திருமூர்த்தி அணையில் இருந்து 2வது மண்டல பாசனத்துக்கு செப்., 11ல் தண்ணீர் திறப்பு?

உடுமலை, :பரம்பிக்குளம் அணையில் இருந்து வரும் தண்ணீரால் திருமூர்த்தி அணை நிரம்பி வருகிறது. இதனால், 2ம் மண்டல பாசனத்துக்கு வரும் 11ம் தேதி தண்ணீர் திறக்கப்படலாம் என தெரிகிறது.திருமூர்த்தி அணையில் இருந்து கோவை, திருப்பூர் மாவட்டத்தில் 3.75 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது. இது 4 மண்டலமாக பிரித்து தண்ணீர் திறக்கப்படுகிறது. முதல் மண்டல பாசனம் கடந்த மார்ச் மாதம் முடிந்தது. இந்த மாதம் 2ம் மண்டல பாசனம் நடைபெற வேண்டும்.

ஆனால், பரம்பிக்குளம் அணையில் தண்ணீர் இல்லாததால் அங்கிருந்து திருமூர்த்தி அணைக்கு நீர்வரத்து கேள்விக்குறியாக இருந்தது.

இருப்பினும், மழை பெய்து செப்டம்பரிலாவது பாசனம் துவங்கும் என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர். இந் நிலையில், பரம்பிக்குளம் அணையின் குறைந்த நீர் இருப்பில் இருந்து சர்க்கார்பதிக்கு தண்ணீர் திறக்கப்பட்டது. அங்கிருந்து 550 கனஅடி தண்ணீர், கான்டூர் கால்வாய் வழியாக திருமூர்த்தி அணைக்கு திறக்கப்பட்டுள்ளது. இந்த தண்ணீர் திறப்பு மூலம் 12 மெகா வாட் மின்சாரம் தயாரிக்கப்படுகிறது. இந்த நீர்வரத்து காரணமாக 60 அடி நீர்மட்டம் கொண்ட அணையில் தற்போது நீர்மட்டம் 35.36 அடியாக உயர்ந்துள்ளது. எனவே, செப்டம்பர் 11ம் தேதி 2ம் மண்டல பாசனத்துக்கு தண்ணீர் திறக்க அரசுக்கு அதிகாரிகள் கருத்துரு அனுப்பி உள்ளனர். தென்மேற்கு பருவமழை பொய்த்ததால் 2 சுற்று தண்ணீர் மட்டும் திறக்கப்படும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

## இயந்திரம் மூலம் நடவுப்பணி எக்டேருக்கு ரூ.5,000 மானியம்

நாகை : நாகை மாவட்டத்தில் இயந்திரம் மூலம் நடவுப்பணி மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு எக்டேருக்கு ரூ.5,000 மானியம் வழங்கப்படும் என்று கலெக்டர் தெரிவித்துள்ளார். இதுபற்றி நாகை கலெக்டர் பழனிச்சாமி விடுத்துள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: நாகை மாவட்டத்தில், நெல் மகசூலை அதிகரிக்க நெல் நடவை இயந்திரமயமாக்கல் மூலம் ஊக்கப்படுத்த, தேசிய வேளாண். வளர்ச்சி திட்டத்தில், நெல் மிஷன் திட்டம் செயல்படுத்தப்பட உள்ளது.

இத்திட்டத்தின்கீழ், 2016-17ம் ஆண்டுக்கு இயந்திரமயமாக்கல் மூலம் நெல் நடவு மேற்கொள்ள எக்ேடருக்கு ரூ.5 ஆயிரம் வீதம், 25 ஆயிரம் எக்ேடரில் மேற்கொள்ள இலக்கு பெறப்பட்டுள்ளது. விவசாயிகள் பாய் நாற்றங்கால் அமைத்து வேளாண்மை பொறியியல் துறை மூலமாகவோ, தொடக்க வேளாண். கூட்டுறவு வங்கி மூலமாகவோ அல்லது தனியார் நிறுவனங்கள் மூலமாகவோ நடவு இயந்திரங்களை பயன்படுத்தி நடவு பணி செய்யலாம்.

இயந்திரம் மூலம் நடவு பணி மேற்கொள்ளும் விவசாயிகள் நடவுப்பணி செய்த பின் அதற்கான பட்டியல், புகைப்படங்கள், சிட்டா அடங்கல், விவசாயிகளின் ஒருங்கிணைந்த கையேட்டின் எண், தங்களுடைய வங்கி கணக்கு எண், ஆதார் அட்டை எண் ஆகிய விவரங்களுடன் தங்கள் பகுதி உதவி வேளாண்மை அலுவலரையோ அல்லது தங்கள் வட்டார வேளாண்மை விரிவாக்க மைய வேளாண்மை உதவி இயக்குனரையோ அணுகி விண்ணப்பத்தை சமர்ப்பித்து நெல் நடவு இயந்திரமயமாக்கலுக்கான பின்னேற்பு மானியம் ஹெக்ேடருக்கு ரூ.5 ஆயிரத்தை பெற்றுக்கொள்ளலாம். அதிகபட்சமாக ஒரு விவசாயிக்கு 2 எக்ேடருக்கு மட்டும் மானியம் வழங்கப்படும். விவசாயிகள் தங்கள் மானியத் தொகையை விரைவாக பெற மகாத்மா காந்தி தேசிய ஊரக வளர்ச்சி திட்டத்தின்கீழ் வழங்கப்படும் வங்கி கணக்கை தவிர்க்க வேண்டும்.

தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின்கீழ், இயந்திர நடவு மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு நாற்றுகள் தயார் செய்து இயந்திரம் மூலம் நடவு பணி மேற்கொள்ள நாற்றங்கால் தட்டுகள் 50 சதவீத மானியத்தில் வழங்க இலக்கு பெறப்பட்டுள்ளது. இந்த நர்சரி தட்டுகள் தேவைப்படும் விவசாயிகள் தங்கள் பகுதி வேளாண்மை உதவி அலுவலர்களையோ அல்லது வேளாண்மை உதவி இயக்குனர்களையோ அணுகி தங்களுக்கு தேவைப்படும் நாற்றங்கால் தட்டுகளை பெற்று பயன்பெறலாம். இவ்வாறு கலெக்டர் தெரிவித்துள்ளார். நாகை மாவட்ட கலெக்டர் பழனிச்சாமி வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளளர்.

## கனகாம்பரம் கிலோ ரூ.450 ஆக உயர்வு

மதுரை: வரத்து குறைவு மற்றும் தொடர் விசேஷ தினங்களால் கனகாம்பரம் ஒரு கிலோ ரூ.450 ஆக அதிகரித்துள்ளது. ஆடி மாதம் முடிவடைந்ததை தொடர்ந்து, தற்போது சுபமுகூர்த்த தினங்கள் துவங்கி உள்ளதால், பூக்களின் தேவை அதிகரித்துள்ளது. தற்போது வெயில் கொளுத்தி வருவதால் பூக்களின் வரத்து குறைந்துள்ளது. இதனால் பூ மார்க்கெட்டில் விலை உயர்ந்துள்ளது. கடந்த வாரம் கிலோ ரூ.300க்கு விற்ற கனகாம்பரம் தற்போது ரூ.450 ஆக அதிகரித்துள்ளது. இதுகுறித்து மதுரை மாட்டுத்தாவணி பூ மார்க்கெட் சங்க தலைவர் மனோகரன் கூறுகையில், ‘‘திண்டுக்கல், கொடைரோடு உள்ளிட்ட பகுதிகளில் இருந்து கனகாம்பரம் அதிகளவில் மார்க்கெட்டிற்கு கொண்டு வரப்படுகிறது. கடந்த சில தினங்களாக இங்கிருந்து கொண்டு வரப்படும் பூ வரத்து வெகுவாக குறைந்துள்ளது. அதேநேரத்தில் தொடர் விசேஷ தினங்கள் என்பதால் விலை

உயர்ந்துள்ளது. வரத்து மேலும் குறையும்பட்சத்தில் விலை மேலும் உயரும்'' என்றார்.

பூக்கள் விலை நிலவரம் (கிலோ கணக்கில்) : கனகாம்பரம் ரூ.450, மல்லிகைப்பூ ரூ.300, முல்லைப்பூ ரூ.200, ரோஜா ரூ.200, பிச்சிப்பூ ரூ.250, சம்மங்கி ரூ.60, வாடாமல்லி ரூ.50, கேந்தி ரூ.50, அரளி ரூ.50, தாமரை ரூ.5.

**வரகு பயிரிட்டால் கூடுதல் வரவு வேளாண்துறை ஆலோசனை**

பழநி, : வரகு பயிரிடும் விவசாயிகளுக்கு கோ 3, ஏ.பி.கே 1 ஆகியவை ஏற்ற ரகங்கள் ஆகும். மரக்கலப்பை கொண்டு 2 முறை நன்கு ஆழமாக உழுது நிலத்தை சமன் செய்ய வேண்டும். அசோஸ்பைரில்லம் 600 கிராம் மற்றும் பாஸ்போ பாக்டீரியா 600 கிராம் கலந்து விதை நேர்த்தி செய்து பின், விதைப்பு செய்ய வேண்டும். கை விதைப்பு முறைக்கு ஹெக்டேருக்கு 12.5 கிலோ விதை பயன்படுத்த வேண்டும். விதைப்பான் கொண்டு வரிசை விதைப்பு செய்தால் ஹெக்டேருக்கு 10 கிலோ விதை பயன்படுத்த வேண்டும்.

வரிசைக்கு வரிசை 22.5 சென்டிமீட்டர் * 10 சென்டிமீட்டர் இடைவெளியும் இருக்க வேண்டும். ஒரு ஹெக்டேர் நிலத்தில் 12.5 டன் மக்கிய தொழு உரத்தை கடைசி உழவின்போது பரப்பி, பின் உழ வேண்டும். தொழு உரத்துடன் 10 பொட்டலங்கள் அசோஸ்பைரில்லம் மற்றும் 10 பொட்டலங்கள் பாஸ்ப்போபாக்டீரியா ஆகிய நன்மை தரும் உயிர் உரங்களை சேர்மம்து இடலாம். ஹெக்டேருக்கு முறையே 44:22 கிலோ தழை மற்றும் மணிச்சத்துக்களை இட வேண்டும். பயிர் விதைத்த 15ம் நாள் ஒரு முறையும், 40 நாள் ஒரு முறையும் கைக் களை எடுக்க வேண்டும்.

களை எடுத்தவுடன் வரிசைக்கு வரிசை 22.5 சென்டிமீட்டர் மற்றும் செடிக்கு செடி 10 சென்டிமீட்டர் இடைவெளியில் பயிர்களைக் களைக்க வேண்டும். விதையின் மூலம் கதிர்கரிப்பூர்டை நோயை தடுக்க ஒரு கிலோ விதைக்கு 2 கிராம் மேன்கோசெப் (அ) குளோரோதலோனிலை கலந்து விதை நேர்த்தி செய்ய வேண்டும். நோய் எதிர்ப்பு இரகமான கோ 3ஐ பயிரிடலாம். கதிர்கள் நன்கு காய்ந்து முற்றிய பிறகு அறுவடை செய்து தானியங்களைப் பிரித்தெடுக்க வேண்டும். பிறகு இவற்றை நன்றாக காயவைத்து, சுத்தம் செய்து சேமித்து வைக்க வேண்டும்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## இன்றைய வேளாண் செய்திகள்

### வலி நீக்கி, வலு தரும் கருஞ்சீரக உணவுகள்



பாரம்பரிய மருத்துவத்தில் முக்கியத்துவம் பெற்றுள்ள உணவுப் பொருள் கருஞ்சீரகம். இது சிறந்த நோய் நிவாரணியாக செயல்படுகிறது. குளிர்ச்சியால் ஏற்படக் கூடிய நோய்களுக்கு இது மிக சிறந்த மருந்து.

இதன் சிறப்பை விளக்கும் பாடல்:

கருஞ்சீரகந்தான் கரப்பனோடு– புண்ணும்

வருஞ்சிராய் பீநிசமும் மாற்றும்– அருந்தினால்

காய்ச்சல் தலைவலியும் கண்வலியும் போமுகில்

வாய்ச்ச மருந்தெனவே வை

பொருள்:

தோல் நோய்களான கரப்பான், தலையில் உண்டாகும் புண், குளிர்ச்சியால் ஏற்படும் ஜலதோஷம், மூக்கடைப்பு, தலைவலி போன்ற நோய்களை தீர்க்கும் என்று, சித்த மருத்துவப்பாடல் எடுத்துச் சொல்கிறது.

ஒரு தேக்கரண்டி கருஞ்சீரகத்தை தூள் செய்து 50 மி.லி. தேங்காய் எண்ணெய்யில் சூடு செய்து, வடிகட்டி அதில் இரண்டு துளி மூக்கில் விட்டால் மூக்கடைப்பு நீங்கும்.

கருஞ்சீரகத்தில் நறுமண எண்ணெய் உள்ளது. அது வயிற்று உப்புசம் மற்றும் வலியை நீக்கி, கழிவுகளை எளிதாக வெளியேற்றும்தன்மை கொண்டது. இரைப்பையில் பாக்டீரியாவால் உண்டாகும் நோய்த் தொற்று மற்றும் குடலில் உள்ள தேவையற்ற பூச்சிகளை அழிக்கும்.

கருஞ்சீரக பொடியை ஒரு தேக்கரண்டி அளவு எடுத்து, சுடுநீரில் கலந்து, சிறிதளவு தேனும் சேர்த்து பருகினால் சிறுநீரக கற்களும், பித்தப்பை கற்களும் கரையும். இதை காலை, மாலை இருவேளை சாப்பிடலாம்.

தொடர் இருமல் மற்றும் ஆஸ்துமா நோயால் துன்பப்படுகிறவர்கள் ஒரு தேக்கரண்டி கருஞ் சீரக பொடியை தேன் மற்றும் அரை தேக்கரண்டி அரைத்த பூண்டு விழுதுடன் கலந்து சாப்பிடவேண்டும். இது நுரையீரலில் உருவாகும் சளியை அகற்றும்.

கருஞ்சீரகத்தில் ‘தைமோகியோனின்’ என்ற வேதிப்பொருள் உள்ளது. இது சிறந்த நோய் எதிர்ப்பு சக்தியை அளிக்கிறது. இதில் உடலுக்கு நன்மை செய்யக்கூடிய கொழுப்பு உள்ளதால் கெட்ட கொழுப்பு குறையும். ஒவ்வாமையும் நீங்கும்.

தோல் நோய்களுக்கு கருஞ்சீரகம் சிறந்த மருந்து. இதனை பொடி செய்து கரப்பான் மற்றும் சொரியாஸிஸ் நோய் இருப்பவர்கள் தேய்த்து குளித்து வரலாம். புண்களால் ஏற்படும் தழும்புகளும் மறையும். குளியலுக்கு பயன்படுத்தும் பொடிகளில் கருஞ்சீரகத்தை அரைத்து சேர்த்து, பயன்படுத்துவது நல்லது.

புற்று நோய்க்கும் கருஞ்சீரகம் நல்ல மருந்தாக செயல்படுவதாக பல்வேறு

ஆய்வுகள் மூலம் நிரூபணமாகி உள்ளது. குறிப்பாக கணையப் புற்று நோயை கட்டுப்படுத்துவதில் இது பெரும் பங்கு வகிக்கிறது. கருஞ்சீரகத்தில் இன்டொர்பிதான் என்ற இயற்கை வேதிப்பொருள் உள்ளது. அது எலும்பு மஜ்ஜை உற்பத்தியை சீராக்கி புற்று நோய் கட்டிகள் ஏற்படாத வண்ணம் பாதுகாக்கிறது. புற்று நோய் உள்ளவர்கள் ஒரு தேக்கரண்டி கருஞ்சீரகத்தை சுடுநீரில் கலந்து காலையும், மாலையும் பருகலாம். சுடுநீருக்கு பதிலாக தேன் கலந்தும் சாப்பிடலாம்.

சில பெண்களுக்கு மாதவிடாய் கோளாறுகள் இருக்கும். அந்த நாட்களில் அடிவயிறு கனமாகி, சிறுநீர் வெளியேறுவதில் சிரமம் ஏற்படும். இதற்கு கருஞ்சீரகம் மருந்தாக பயன்படுகிறது. அதனை வறுத்து லேசாக வெடிக்க விட்டு தூள் செய்து வைத்துக்கொண்டு மாதவிடாய் ஏற்படும் தேதிக்கு பத்து நாட்கள் முன்பிருந்து ஒரு தேக்கரண்டி அளவு எடுத்து தினமும் இருவேளை தேன் அல்லது கருப்பட்டி கலந்து சாப்பிடவேண்டும். இது மாதவிடாய் சிக்கலை போக்கும். வயிறு கனம் குறைந்து, சிறுநீர் நன்றாக பிரியும்.

பிரசவத்திற்கு பின்பு கருப்பையில் உள்ள அழுக்கை நீக்க, குழந்தை பெற்ற மூன்றாவது நாளில் இருந்து, ஒரு தேக்கரண்டி கருஞ்சீரக பொடியுடன் பனைவெல்லம் கலந்து உருண்டை செய்து காலை, மாலை ஐந்து நாட்கள் தொடர்ந்து சாப்பிட வேண்டும். கருஞ்சீரகம் பல முக்கியமான சித்த மருந்துகளில் சேர்க்கப்படுகிறது.




கருஞ்சீரகம்  சேர்த்து  தயார் செய்யப்படும் உணவுகள்:

**சாதம்**

கருஞ்சீரகம் –1 தேக்கரண்டி

கடுகு–1/2 தேக்கரண்டி

பெரிய வெங்காயம் –1

(நீளமாக நறுக்கிக் கொள்ளவும்)

பூண்டு –5 பற்கள்

மிளகு –10

(தூளாக்கிக் கொள்ளவும்)

நெய் –2  தேக்கரண்டி

உப்பு –தேவைக்கு

பச்சரிசி–200 கிராம்

(வேகவைத்துக் கொள்ளவும்)

செய்முறை:

* வாணலியில் நெய் ஊற்றி, கடுகை தாளிக்கவும். பின்பு அதில் கருஞ்சீரகத்தை கொட்டி வறுத்துவிட்டு, வெங்காயத்தை சேர்த்து நன்றாக வதக்கவும். பூண்டுவை சிறிதாக நறுக்கி அத்துடன் கலந்து கொள்ளவும். மிளகு தூள், வடித்து வைத்துள்ள சாதம், உப்பு சேர்த்து நன்றாக கிளறி சுவைக்கவும்.

* இதற்கு தயிர் பச்சடி பொருத்தமாக இருக்கும். சளி, இருமல், உடல்வலி இருக்கும்போது இதை தயார் செய்து சாப்பிடலாம். குளிர் காலத்திற்கும் ஏற்ற உணவு.

* பெண்கள் மாதவிடாய் காலங்களில் இதை தயாரித்து சுவைக்கலாம். அஜீரணத்தை போக்கும். வயிற்றுவலியை குணமாக்கும். உடல் சூட்டை அதிகரித்து இதமாக்கும்.

**சாலட்**

கருஞ்சீரகம்–1 தேக்கரண்டி.

வெள்ளரிக்காய் (சிறியது) –1

இஞ்சி –1 துண்டு

(சிறிதாக நறுக்கிக்கொள்ளவும்)

மிளகு தூள் –1/2 தேக்கரண்டி

உப்பு–தேவைக்கு

செய்முறை:

* வாணலியில் கருஞ்சீரகத்தை வறுக்கவும். லேசாக பொரிய ஆரம்பிக்கும்போது இறக்கிவிடவும்.

* வெள்ளரிக்காயை சிறு துண்டுகளாக நறுக்கவும். இஞ்சி, மிளகுதூள், உப்பு, கருஞ்சீரகத்தை கலந்து சுவைக்கவும்.

*சர்க்கரை நோயாளிகளும், உயர் ரத்த அழுத்த பாதிப்புகொண்டவர்களும் இதை சாப்பிடலாம்.

*உடல் எடையை குறைக்க விரும்புகிறவர்கள் இதை அடிக்கடி செய்து சாப்பிடலாம்.

**பஞ்ச மசாலா பொடி**

கருஞ்சீரகம் – 50 கிராம்

சீரகம் – 50 கிராம்

பெருஞ்சீரகம் –50 கிராம்

ஓமம்–50 கிராம்

வெந்தயம் – 50 கிராம்

செய்முறை:

* வாணலியில் ஒவ்வொரு பொருளையும் தனித்தனியாக கொட்டி, வறுத்து ஆறவைத்து, மிக்சியில் அரைத்து, பாட்டிலில் அடைத்துவைத்துக்கொள்ளவும்.

* சூடான சாதத்தில் ஒரு தேக்கரண்டி சேர்த்து பிசைந்து சாப்பிடுங்கள்.

*இதை சாப்பிட்டால் வயிற்று வலி நீங்கும். ஜீரண சக்தி மேம்படும்.

## உடலுக்குத் தேவை ஆரோக்கியமான 'உள்அலங்காரம்'



**அ**லங்காரத்திற்கு முக்கியத்துவம் தரும் பெண்கள், இப்போது ஆரோக்கியத்திலும் அக்கறை காட்டத் தொடங்கிவிட்டார்கள். வெளி உடலில் அழகை பேணுவது அலங்காரம், அதுபோல ஆரோக்கியம் பேணுவது உடலின் உட்புற அலங்காரமாகும். உற்சாகமும், ஊக்கமும் தரும் உடல் உட்புற அலங்காரம், புற அலங்கரிப்பு இல்லாமலே நம்மை புத்துணர்ச்சியாக உணர வைக்கும். ஆரோக்கியமாக வாழ வைக்கும்.

இப்படி உடலின் உட்புறத்தை பேணும் கலை, 'ஆரோக்கிய சமநிலை' என்று அழைக்கப்படுகிறது. உடல் ரசாயனத் திரவங்களின் அமில காரச் சமநிலையை

அறிந்து கொண்டு அதற்கேற்ற உணவுகளை உண்டு ஆரோக்கியம் பேணுவதே ஆரோக்கிய சமநிலை முறையாகும்.

52 வயதான டாக்டர் எல்லி மேக்பர்சன், அமிலகாரத்தன்மை பேணும் உடலமைப்பு பற்றிய 'த பாடி' என்ற பிரபலமான நூலை எழுதியவர். கினித் பால்ட்ரா, ஜென்னிபர் அனிசன் மற்றும் விக்டோரியா பெக்காம் போன்ற மருத்துவர்கள் குழுவும் அவருடன் பணிபுரிகிறார்கள். 'அல்கலின்' எனும் உடல்பொருள் காரத்தன்மைக்கு காரணமாகிறது. இதை சீராக பராமரிப்பதும், ஆரோக்கியத்திற்கு பயன்படுத்திக் கொள்வதும்தான் இவர் களின் மருத்துவ முறை.

அமில கார பரிசோதனை முறை நீண்டகாலமாக வழக்கத்தில் இருக்கத்தான் செய்கிறது. ஆனால் இவர்கள் இதற்கு அதிக முக்கியத்துவம் அளித்து வலியுறுத்தி வருகிறார்கள். 'பிஎச்' பரிசோதனை எனப்படும் அமில கார பரிசோதனை உடலில் இருக்கும் ரசாயன பொருட்கள் (அமிலம்)– அல்கலின் (காரம்) அளவை தெளிவாக காட்டிவிடும்.

அமிலமும், காரமும் சீரான அளவில் இல்லாவிட்டால், அதாவது ஏதாவது ஒன்றின் அளவு அதிகரிக்கும்போது நோய்கள் குடிபுகும். வேகமாக மூப்படைதல், வைட்டமின் அளவு குறைதல், உடல் பருமனாதல், நொதிகளின் செயல்பாடு குறைவது, எரிச்சல் ஏற்படுதல், உறுப்புகளின் செயல்பாடு முடங்குதல் என ஏராளமான பாதிப்புகள் ஆரம்பமாகும்.

உடம்பின் அமில காரத்தன்மை அளவு ஒன்று முதல் 14 வரை இருக்க வேண்டும். இந்த அளவு 7–க்கு கீழ் குறைந்தால் உடலில் அமிலத்தன்மை மிகுந்திருப்பதாகவும், 7–க்கு அதிகரித்தால் காரத்தன்மை மிகுந்திருப்பதாகவும் கருதலாம். நோய் எதிர் பொருட்கள், அவசியமான தாதுக்கள், வைட்டமின்கள் அளவு சரியாக இருக்கும்போது இந்த அமில காரச் சமநிலையும் சீராக இருக்கும். உடலும் ஆரோக்கியமாக இருக்கும். உதாரணமாக பற்கள் வெண்மையாக இருப்பது குடல்பகுதி தூய்மையாக இருப்பதன் அடையாளம். பற்களில் மஞ்சள் கறை படிந்தால் உடலில் அமிலத்தன்மை அதிகமானதன் ஒரு அறிகுறி.

வேப்பங்குச்சியால் பல்துலக்குவது ஒரு பழமையான இந்திய வழக்கம். இந்த குச்சியை ஆங்கிலத்தில் ‘டாடூன்’ என்று குறிப்பிடுவது உண்டு. இந்த வழக்கம் சிறந்த நோய் எதிர்ப்புத்தன்மை கொண்டது. பாக்டீரியா கிருமிகளை அண்ட விடாது. வேப்பங்குச்சியால் பல்துலக் கும் வழக்கம் வாய்ப் பகுதி முதல் குடல்பகுதி வரை ஆரோக்கியம் தரக்கூடியது. மேலும் பித்தநீரால் விளையும் பற்கறை போன்றவற்றையும் தடுத்து, காரச் சமநிலையை ஏற்படுத்தும் என்று இந்திய பண்பாட்டை பெருமைப்படுத்துகிறார்கள் இந்த மருத்துவ ஆய்வுக்குழுவினர்.

ஆரோக்கிய சமநிலையை குலைக்கும் அமிலங்கள் பற்றி இவர்கள் அதிகம் பேசுகிறார்கள். ‘‘நமது உணவுப் பொருட்கள் உடலில் அமிலத்தன்மையை குறைத்துக் கூட்டும் தன்மை கொண்டவை. இதனால் உடலில் மாசுகள் சேரும். அல்கலின் காரப்பொருட்களோ அமிலத்தன்மை அதிகரிக்காமல் பார்த்துக் கொள்ளும். அமிலம் அதிகரிப்பதால் நச்சுகளை அகற்றும் தன்மை உடலுக்குள் குறைந்துவிடுகிறது. இதனால் நோய்த் தாக்குதல்கள் தொடங்குகின்றன. சருமம் பொலிவு குறைவது, முடி உலர்ந்து காணப்படுவது, நகம் உடைதல் போன்ற அறிகுறிகள் அமிலத்தன்மை அதிகரித்துவிட்டதைக் காட்டும் அறிகுறிகளாகும்.

உடல் இயற்கையாகவே அமில–காரத்தன்மையை சமன்செய்து கொள்ளக் கூடியது. அதற்காக நாம் கூடுதலாக எந்த முயற்சியும் செய்யாவிட்டாலும் உடலே அந்த வேலையை கவனித்துக் கொள்ளும். இருந்தாலும் இந்தச் சமநிலையில் மாறுபாடு ஏற்பட்டால் அதை நாம்தான் சரி செய்ய வேண்டும். அமிலகாரத் தன்மையை சீராக வைக்கும் உணவுகள் என்று தனியாக எதுவும் இல்லை. காய்கறிகள், பழங்களை உணவில் அதிகமாக சேர்த்துக் கொள்வது அமில காரத்தன்மையை சீராக வைத்துக் கொள்ளும் ஒரு வழியாகும்’’ என்கிறார்கள் இந்த மருத்துவர்கள்.

உதாரணமாக எலுமிச்சை அதிக அளவில் அமிலத்தன்மை கொண்டதாகும். ஆனால் அதை உண்ணும்போது உடலில் அந்த அமிலம் வளர்சிதை மாற்றம் அடைந்து காரத்தன்மையாக மாற்றம் பெறுகின்றன. இதனால் அமிலகாரச் சமநிலை ஏற்படுகிறது. ‘‘காரத்தன்மை மிகும்போது எரிச்சலடைதல், நடுக்கம், பதற்றம் ஏற்படுதல், வலிப்பு உண்டாதல் உள்ளிட்ட பிரச்சினைகள் ஏற்படும்’’ என்று அவர்கள் கூறுகிறார்கள்.

அமில காரத்தன்மைகளை வீட்டிலேயே பரிசோதிக்கும் எளிய கருவிகள் கிடைக்கின்றன. இதில் நமது உமிழ்நீரையோ அல்லது சிறுநீரையோ ஒரு துளி விட்டாலும் அமில கார அளவை காட்டிவிடும். காலை எழுந்ததும் வெறும் வயிற்றில் அல்லது சாப்பிட்ட 2 மணி நேரம் கழித்து இந்த பரிசோதனை மேற்கொள்ளலாம். பரிசோதனை முடிவுக்கு ஏற்ப உணவுகளை உண்டு ஆரோக்கியம் பெறலாம்.

**அமில காரத்தன்மையை சீராக வைத்துக்கொள்ள மருத்துவர்கள் கூறும் வழிமுறைகள் :**



* காய்கறிகளில் செய்யும் ஜூஸ்கள் நோய் எதிர் பொருட்கள், குளோரோபில் நிறைந்தது. இவை சத்துப்பொருட்களை ஈடு செய்து அமில காரத் தன்மையை சீராக வைக்கும். பச்சையாக காரட் ஜூஸ், பீட்ரூட் ஜூஸ் என பலவிதமான காய்கறி ஜூஸ்களை தயாரித்து பருகலாம்.

* ஆவியில் வேக வைத்த, நீரில் வேக வைத்த மற்றும் எண்ணெய் இல்லாமல் வறுக்கப்பட்ட உணவுகளை சாப்பிடலாம்.

* எண்ணெய்யில் பொரித்த உணவுகள், 'ஜங் புட்' எனும் துரித உணவுகளை தவிர்க்க வேண்டும்.

* பால் பருகுவது காரத்தன்மையை கட்டுப்படுத்தும். இதனால் சிறிதளவு அமிலத்தன்மை கூடுவது உண்டு. அதை காய்கறிகள் கட்டுப்படுத்திவிடும்.

* பதப்படுத்தப்பட்ட பாக்கெட் உணவுகள், இறைச்சி சாப்பிடுவதை தவிர்க்க வேண்டும்.

* கொழுப்பு நிறைந்த உணவுகளை நீக்கிவிடலாம். சில எண்ணெய் வகைகளிலும், கொட்டை வகைகளிலும் அதிக அளவு கொழுப்பு உள்ளது.

* உடலில் ஆல்ஹகால் தன்மையை அதிகரிக்கும் மது வகைகளை சாப்பிடக்கூடாது.

* பெர்ரி, மா, பப்பாளி, காரட், பூசணி, தக்காளி, புரோகோலி, எலுமிச்சை, பீட்ரூட், சர்க்கரை வள்ளிக் கிழங்கு, தேங்காய், பாதாம், பழங்கள், கீரைகளை அதிகமாக உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும். குறைந்தபட்சம் தினமும் ஒரு கப் அளவுக்கு பச்சை காய்கறிகள் சாப்பிட வேண்டும்.

## அந்தியூர் வரட்டுப்பள்ளம் அணையின் நீர்மட்டம் 11 அடியாக குறைந்தது



அந்தியூர்,

அந்தியூர் வரட்டுப்பள்ளம் அணையின் நீர்மட்டம் 11 அடியாக குறைந்தது.

<u>வரட்டுப்பள்ளம் அணை</u>

அந்தியூர் அருகே மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் வரட்டுப்பள்ளம் அணை அமைந்து உள்ளது. அணையின் மொத்த உயரம் 33.33 அடி ஆகும். அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளாக பர்கூர் மலைப்பகுதியில் உள்ள தாளக்கரை, தாமரைக்கரை ஆகியவை உள்ளன. இந்த பகுதியில் பெய்யும் மழை நீரானது வரட்டுப்பள்ளம், கும்பரவாணிப்பள்ளம், கள்ளுப்பள்ளம், வழியாக வரட்டுப்பள்ளம் அணையை வந்தடைகிறது.

இந்த அணையின் மூலம் அந்தியூர் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளை சேர்ந்த 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன.

<u>11 அடியாக குறைந்தது</u>

அதுமட்டுமின்றி பர்கூர் மலைப்பகுதியில் வசிக்கும் புலி, சிறுத்தைப்புலி, யானை, கரடி, காட்டெருமை, புள்ளிமான், செந்நாய் உள்பட பல்வேறு வனவிலங்குகளுக்கும் இந்த அணைதான் குடிநீர் ஆதாரமாக உள்ளது. கடந்த அக்டோபர் மாதம் பெய்த மழையின் காரணமாக வரட்டுப்பள்ளம் அணை அதன் முழு கொள்ளவான 33.33 அடியை எட்டி உபரி நீர் வெளியேறியது.

இதைத்தொடர்ந்து அணையில் இருந்து பாசனத்துக்காக தண்ணீர் திறந்து விடப்பட்டது. இந்த நிலையில் கடந்த 2 மாதத்துக்கு முன்பு அணையில் இருந்து பாசனத்துக்கு தண்ணீர் திறந்து விடுவது நிறுத்தப்பட்டது. மேலும் தற்போது பர்கூர் மலைப்பகுதியில் மழை பெய்யவில்லை. இதனால் அணைக்கு வரும் நீர்வரத்து முற்றிலும் நின்று விட்டது. நீர் வரத்து முற்றிலும் இல்லாதது, பாசனத்துக்கு தண்ணீர் திறந்து விட்டது போன்ற காரணங்களால் அணையின் நீர்மட்டம் 11 அடியாக குறைந்து குட்டை போல் காட்சி அளிக்கிறது. இனி மழை பெய்தால்தான் அணை நிரம்ப வாய்ப்பு உள்ளதால் அந்த பகுதியை சேர்ந்த பொதுமக்கள் மழையை எதிர்நோக்கி உள்ளனர்.